விலை சதம் 5

முதற் பதிப்பு

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டார்த் தெரு, கொழும்பு.

சுதந்திரன்
THE "SUTANTIRAN."

TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
3 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா „ 12-00
1 வருடச் சந்தா „ 24-00
மானேஜர்
"சுதந்திரன்"
194 A, தட்டார்த் தெரு, கொழும்பு.

Velegrams: 'SUTANTIRAN' COLOMBO

Phone: 3411.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் | கொழும்பு சர்வஜித்து வருஷம் மார்கழி மீ 3உ வியாழக்கிழமை | Colombo December, 18 1947 — ஹிஜிரி 1367 ஸபர் பிறை 5 | இதழ் 187

"கண்டி அரசர் சந்ததியாருக்கு இலங்கையில் வேலை கொடுங்கள்"

கேகாலை பிரதிநிதியின் சிபார்சு

பொது தர்மகர்த்தா இலாகா நஷ்டத்தை சரிக்கட்ட திரு. கே. கனகரத்தினம் கூறும் யோசனை

தோற்ற அபேட்சகருக்கு நீதி இலாகாவில் உத்தியோகம் கூடாது என்கிறார் வி. குமாரசாமி

அரசாங்கம் கைப்பற்றும் காணிகளுக்கு தாமதமின்றி நஷ்ட ஈடு வழங்கவேண்டும்

(எஸ். ஜே. வி. செல்வநாயகம்)

அரசாங்கசெலவினகோரிக்கைகள்மீதுவிவாதம்

கொழும்பு, டிச. 17

பாராளுமன்றம் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் தலைமையில் கூடிய போது வரவு செலவுத் திட்டம் கமிட்டி முறைப்படி விவாதம் தொடர்ந்து நடைபெற்றது. அனுவசியமான விவாதங்கள் எதுவுமின்றி வரவு செலவுத் திட்டம் படிப்படியாக எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. பென்ஷன்களும் நன்கொடைகளும் அளிக்கப்படுவதில் ஏற்படும் தாமதங்கள் பற்றி டாக்டர் என். எம். பெரேராவும், திரு டபிள்யூ. தஹநாயகாவும் கண்டித்துக் கூறினார்கள். இதன் பின் நிதி மந்திரி பதிலளிக்கையில் தாம் இதுபற்றி கவனிப்பதாகவும் ஒரு உத்தியோகஸ்தர் ஓய்வெடுக்கும் போது அல்லது அவரது வாரிசுக்கு பென்ஷன் நன்கொடை முதலியவற்றின் முடிவுகள் தீர்க்கப்படும்வரை முற்பணம் கொடுக்க ஒழுங்குகள் செய்வதாகவும் கூறினார்.

கண்டி ஸ்ரீ விக்கிரமராஜசிங்காவின் சந்ததியினருக்குப் பென்ஷன் வழங்கப்படுவதற்கு ஒதுக்கப்பட்ட ரூபாய் 18,000 ரத்துச் செய்யப்படவேண்டுமென்று டாக்டர் என். எம். பெரேரா கூறினார். கேகாலை பிரதிநிதி திரு என். கீர்த்திரத்தின பேசுகையில் இவர்களுக்கு இலங்கையில் உத்தியோகங்களைக் கொடுக்கலாமென்று கூறினார்.

கடந்த ஜூன் மாத வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டதற்காக தற்காலிக குமாஸ்தாக்களை நிரந்தர சேவைக்குள் எடுக்கப்படவில்லையென்று டாக்டர் பெரேரா கூறினார். இவ்விஷயங்களைக் கவனிக்க தகுதிவாய்ந்த அதிகாரிகள் இருப்பதாகவும் தாம் இதற்குப் பொறுப்பல்லவென்றும் பிரதமர் பதிலளித்தார்.

அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு தொழிற் சங்க உரிமை மறுக்கப்படுவதுபற்றியும் தொழிற் சங்க ஆலோசகர் திரு டி. ஹல்ஸன் ராஜினமாச் செய்து சென்றதுபற்றியும் திரு பிலிப் குணவர்தன கண்டித்துப் பேசினார்.

பொது வேலைகளுக்குப் பொது மக்களிடமிருந்து எடுக்கப்பட்ட காணிகள், சொத்துக்கள் முதலானவற்றுக்கு அரசாங்கம் நஷ்ட ஈடு கொடுப்பதில் ஏற்படும் தாமதத்தினால் அவர்கள் அதிக கஷ்டமடைகின்றனர் என்றும் ஏழை மக்களின் சௌகரியத்திற்கேற்ப உடனடியாக இவை கவனிக்கப்பட வேண்டுமென்றும் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூறினார்.

பாராளுமன்றம் நேற்று பிர்பகல் 1 மணிக்கு சபாநாயக திரு ஏ. எப். மொலமுரே தலைமையில் ஆரம்பமாயிற்று. 1947-48 வரவு செலவுத் திட்டத்தைக் கமிட்டி முறைப்படி பரிசீலனை செய்யப்படுவது தொடர்ந்து நடைபெற்றது.

நிதி மந்திரி செலவுகளுக்கு (பகுதி 19) ஒதுக்கப்பட்ட மான்யத் தொகை ரூ. 153,684 சம்பந்தமாக கொண்டுவரப்பட்ட திருத்தப் பிரேரணைகள் எடுக்கப்பட்டன.

நிதி மந்திரிக்கு ஒதுக்கப்பட்ட விருந்துச் செலவு ரூ. 6000ஐயும் டாக்டர் என். எம். பெரேரா ஆட்சேபித்தார்.

திரு. டபிள்யூ தஹநாயகா பேசுகையில் 17 அதிகாரிகளுக்கு விருந்துச் செலவுகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தேசம் இன்றுள்ள கஷ்ட நிலையில் இத்தகைய விஷயங்கள் கூடாதென்றும் இத்தொகை ரத்துச் செய்யப்பட வேண்டுமென்றும் கூறினார். திருத்தப் பிரேரணை சபையில் தோல்வியுற்றது. 19 பகுதி மான்யம் நிறைவேறியது.

அரசாங்க ஆலோசகர்

தற்காலிக அரசாங்க ஆலோசகர் (பகுதி 20) பதவிக்கு ஒதுக்கப்பட்ட ரூ. 84,319 மான்யம் சம்பந்தமாக ஆலோசிக்கப்பட்டது. டாக்டர் என். எம் பெரேரா, புதிய அரசாங்க ஆலோசகர் பற்றி கேட்டபோது பிரதமர் திரு டி. எஸ். சேனநாயகா பதிலளிக்கையில் ஸர். சார்ல்ஸ் கொலின்ஸ் அரசாங்க ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளாரென்று கூறினார். இந்த மான்யம் நிறைவேறியது.

பொக்கிஷ இலாகா செலவு (பகுதி 21) மான்ய தொகை ரூ 1,017,011 சம்பந்தமான திருத்தப் பிரேரணைகள் எடுக்கப்பட்டன

பொக்கிஷ இலாகா டிபுடி காரியதரிசியின் சம்பளத்தில் ரூ. 2250 குறைக்கப்பட வேண்டுமென ஒரு திருத்தப் பிரேரணையை திரு கே கனகரத்தினம் கொண்டுவந்தார். ஸ்தாபன கட்டுப்பாட்டதிகாரியின் சம்பளத்தில் ரூ 100 குறைக்கப்பட வேண்டுமென தாம் கொண்டுவந்த திருத்தப் பிரேரணை பற்றி திரு தஹநாயகா பேசுகையில், தொழில கட்டுப்பாட்டதிகாரியின் அனுமதி கிடைத்த பின்னர்தான தொழிலாளர் தங்கள் பென்ஷன் நன்கொடை முதலானவற்றை எடுக்க கூடியதாக இருப்பதாகவும் இதற்கு சுமார் ஒன்றரை வருடங்கள்கூட அவர்கள் தாமதிக்கவேண்டியிருப்பதாகவும் சில சமயங்களில் இன்னும் கால தாமதமாவதாகவும் கூறினார்

திரு. சிவபாலன் பேசுகையில் பலர் தங்களுடைய பென்ஷனை எடுப்பதற்கு மாதக்கணக்கில் தாமதிக்கவேண்டியிருப்பதாகவும் கூறினார்

நிதிமந்திரி பேசுகையில் இவ்விஷயத்தில் தாமதம் ஏற்படத்தான் செய்யுமென்றும் தாம் இப்பொழுது ஓய்வெடுக்கும் அதிகாரிக்கோ அன்றி அவரின் ஆதரவில் வாழ்பவருக்கோ முற்பணமாக கொடுப்பதுபற்றி ஆலோசனை செய்து வருவதாகவும் கூறினார்.

இப்பொழுது அரசாங்கப் பென்ஷன் வழங்கும் முறையை டாக்டர் என. எம். பெரேரா கண்டித்தார். இப்பகுதியின் மற்ற திருத்தங்கள் வாபஸ் பெறப்பட்டு மான்யத் தொகை அங்கீகரிக்கப்பட்டது.

பென்ஷன்கள் (பகுதி 22) சம்பந்தமாக ஒதுக்கப்பட்ட ரூபா 285.6 344 பற்றிய திருத்தப் பிரேரணைகள் எடுக்கப்பட்டன. இந்த மான்யத்தை ரூ 15,000 குறைக்கும்படி டாக்டர் என. எம். பெரேரா கொண்டுவந்த திருத்த பிரேரணையில விவாதம் நடந்தது. இந்த மான்யத் தொகை குறைக்கப்படாது நிறைவேற்றப்பட்டது.

பொதுக் கடன் (பகுதி 23) சம்பந்தமாக ஒதுக்கப்பட்ட ரூ 32,225,774 மான்யம் பற்றி டாக்டர் என். எம். பெரேரா ரூ 25,200 குறைக்கப்பட வேண்டுமென்று ஒரு திருத்தப் பிரேரணை கொண்டு வந்தார். இந்த மான்யத் தொகையும் நிறைவேற்றப்பட்டது.

அடுத்தபடியாக நாணய செலாவணி (பகுதி 24) மான்யம் நிறைவேறியது. இதற்கு ரூ. 212,000 மான்யம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கடன் சபைக்கு (பகுதி 25) ஒதுக்கப்பட்ட மான்யம் ரூ. 15,636 நிறைவேறியது.

தேசிய சேமிப்பு இயக்கத்துக்கு ஒதுக்கப்பட்ட (பகுதி 26) மான்யம் ரூ. 312,816 சம்பந்தமாக திரு வி. வன்னியசிங்கம் கொண்டுவந்த திருத்தப் பிரேரணைகள் எடுக்கப்பட்டன. மேற்பார்வையாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் ரூ 6000 குறைக்கப்படுவது சம்பந்தமாக கொண்டு வரப்பட்ட திருத்தம் பற்றி திரு தஹநாயகா பேசிய பின் டாக்டர் என். எம். பெரேரா பேசினார். இந்த இலாகா அவசியமில்லையென்று அவர் கூறினார்.

நிதி மந்திரி பேசுகையில் யுத்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த இலாகா இப்பொழுது 24 கோடி ரூபாய் சேர்த்துள்ளதென்றும் நாட்டுப் பகுதிகளுக்கு பொறுப்பாகவே இங்கு மேற்பார்வையாளர் அதிகரிக்கப்பட்டுள்ளனர் என்றும் இந்த இயக்கம் வெற்றியடைந்துள்ளதென்றும் கூறினார். இந்த இலாகாவிற்கு கிடைத்த சேமிப்பு முழு விபரங்களையும் கூறும்படி திரு டபிள்யூ பெரேரா கேட்டபோது நிதி மந்திரி இக்கேள்விக்கு முன்னறிவித்தல் வேண்டுமென்று தெரிவித்தார்.

திரு வன்னியசிங்கத்தின் இரு திருத்தப் பிரேரணைகளும் திரு டபிள்யூ. பெரேராவின் படக்காட்சி விளம்பரம் சம்பந்தமான மான்யத்தில் ரூ 5000 குறைப்பது சம்பந்தமான பிரேரணையும், டாக்டர் என். எம் பெரேராவின் ரூ 17,000 ரூ 20,000 குறைப்பது சம்பந்தமான திருத்தப் பிரேரணைகளும் வாபஸ் பெறப்பட்டன. பகுதி 26 நிறைவேற்றப்பட்டது.

அரசாங்க ஸ்டோர்கள் (பகுதி 27) மான்யம் ரூ 921,268 எடுக்கப்பட்டது. டாக்டர் என. எம் பெரேரா இதில் ரூ. 5946 குறைக்கப்பட வேண்டுமென கொண்டுவந்த திருத்தப் பிரேரணை வாபஸ் பெறப்பட்டது. நிதி மந்திரி இதில் 720 கூட்டப்பட வேண்டுமென கொண்டு வந்த பிரேரணை நிறைவேறியது. டாக்டர் என். எம். பெரேராவும், திரு கே கனகரத்தினமும் இந்த மான்யத்தில் ரூ 80,000 குறைப்பது, ரூ 31,000, ரூ.1000, ரூ 1000 முதலியன குறைப்பது சம்பந்தமாகக் கொண்டுவந்த திருத்தப் பிரேரணைகள் கைவிடப்பட்டன பகுதி 27 மான்யம் நிறைவேறியது.

வருமானவரி (பகுதி 28) மான்யம் ரூ. 961,836 சபையில் நிறைவேறியது. இந்த இலாகாவின் வேலைகளைப் பாராட்டி திரு ஈ. எப். என். கிரேஷியன் பேசுகையில் இந்த இலாகாவில் அனுபவமுள்ள முதிர்ந்த குமாஸ்தாக்களைவைத்திருக்கவேண்டுமென்றும் இங்குள்ள தற்காலிக குமாஸ்தாக்களை வேறு இலாகாக்களுக்கு மாற்ற வேண்டுமென்றும் கூறினார் தற்காலிக குமாஸ்தாக்கள் பரீட்சித்துப் பார்ப்பதற்காகவே இங்கு வைக்கப்பட்டுள்ளனர் என்றும் விரைவில் அவர்களை நிலையான சேவைக்குள் எடுக்கப்படுமென்றும் பிரதமர் கூறினார்.

சுங்க இலாகா (பகுதி 28) மான்யம் ரூ. 1,978,538 சம்பந்தமாக திரு தஹநாயகா கொண்டு வந்த திருத்தப்பிரேரணைவாபஸ் பெறப்பட்டது. இங்குள்ள குமாஸ்தாக்கள் வத்தைக்காரர்கள் சம்பளம், ஓவர் டைம முதலியன பற்றி டாக்டர் என் எம் பெரேரா பேசினார்.

நிதி மந்திரி இந்த மான்யத்தில் ரூ 2520, ரூ 576 ரூ. 600, ரூ 870, ரூ. 750 ரூ 2172 அதிகரிப்பது சம்பந்தமான திருத்தப் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன டாக்டர் என். எம். பெரேரா கொண்டுவந்த திருத்தப் பிரேரணைகள் ரூ 10,000 ரூ 17,700, ரூ 25,550 முதலியன குறைக்கப்படுவது சம்பந்தமானவை விவாதத்தின் பின் வாபஸ் பெறப்பட்டன. சுங்க இலாகா மான்யம் நிறைவேறியது.

விதவைகள், அனாதைகள் பென்ஷன் நிதி (பகுதி 30) மான்யம் ரூ 86,480 சம்பந்தமாக விவாதம் நடந்தது. ஆசிரியர்களும் இந்த நிதிக்குக்கொடுப்பது பற்றி டாக்டர் பெரேராவும் திரு தஹநாயகாவும் பேசினார்கள். நிதி மந்திரி தாம் இவை பற்றி கவனிப்பதாக கூறினார். இந்த மான்யம் நிறைவேறியது

எக்ஸ்சேஞ் கட்டுப்பாட்டு பகுதி (பகுதி 31) மான்யம் ரூ 125,842 நிறைவேறியது.

குமாஸ்தா சேவை (பகுதி 32) மான்யம் ரூ 60,530 சம்பந்தமாக விவாதம் நடந்தபோது திரு பீட்டர் கெனமன் பேசுகையில் குமாஸ்தாக்களுக்கு தொழிற் சங்க உரிமைகள் வழங்கப்படவில்லையென்று கூறினார். குமாஸ்தாக்கள் சங்கங்களை வேறு சங்கங்களுடன் இணைக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளதா என திரு. டி பி. ஆர். குணவர்தன கேட்டதற்கு பிரதமர் 'இல்லை' யென்று கூறினார்

திரு கெனமன் பேசுகையில் இக்குமாஸ்தா சேவையிலுள்ளவர்கள் தங்கள் சங்கங்களை ஒன்றுடன் ஒன்று இணைத்துக் கொள்ளவும் அதன் பின விரும்பின் வெளிச் சங்கங்களுடன் இணைத்துக் கொள்ளவும் அனுமதிக்கப்படவேண்டுமென்று கூறினார்

விட்லி சபைகளை நடத்த குமாஸ்தாக்கள் அனுமதிக்கப்படுவார்களென்றும் ஆனால் வெளிச் சங்கங்களுடன் இணைக்கப்பட அனுமதிக்கப்பட மாட்டார்களென்றும்பிரதமர்கூறினார்

அரசாங்க குமாஸ்தாக்கள் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டதற்காக வேலை இடமாற்றம் செய்யப்பட்டார்களென்றும் அவை சாதாரணமான வேலை இடமாற்றமாக தெரிந்த போதிலும் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டதற்காகவே இவ்விதம் செய்யப்பட்டதென்னும் அபிப்பிராயத்தைக் கொடுத்துள்ளதென்றும் பிரதமர் இதுபற்றி விசாரிக்க வேண்டுமென்றும் திரு எ மாட்டின்ஸ கூறினார். பிரதமர் இதுபற்றி தாம்கவனிப்பதாகப் பதிலளித்தார்

(4-ம் பக்கம் பார்க்க)

தென்கிழக்கு ஆசிய பாதுகாப்பு திட்டம்

லார்டு மவுண்ட்பேட்டன் முயற்சி

இலங்கை பிரதம மந்திரியுடன் டில்லியில் பேச்சு நடைபெறும்

புதுடில்லி, டிச. 16

டிசம்பர் 22-ம் தேதி கூட்டுப் பாதுகாப்பு கவுன்ஸில் கூட்டம் நடைபெறும்போது இந்தியா-பாகிஸ்தான் கூட்டுப் பாதுகாப்பு சம்பந்தமாக லார்டு மவுண்ட் பேட்டன், சமர்ப்பிக்கும் சிபார்சுகளை இரு நாடுகளின் மந்திரிகளும் பரிசீலனை செய்வார்கள். லார்டு மவுண்ட் பேட்டன் தென்கிழக்கு ஆசியா பிரதம தளபதியாக இருந்தபடியால், தென் கிழக்கு ஆசியா நாடுகளின் ஐக்கியபாதுகாப்புத் திட்டமொன்றை ஏற்படுத்தவும் அவர் முயற்சிப்பார் இது சம்பந்தமாக பர்மாவுடன் ஏற்கனவே சமரசப் பேச்சுகள் நடந்தன. இலங்கை பிரதம மந்திரி திரு டி. எஸ சேனநாயக்கா டில்லி விஜயம் செய்யும்போது அவருடனும் இது சம்பந்தமாக கலந்து ஆலோசனை செய்யப்படும். பிரிட்டனுடன் நேசபான்மையான இத்திட்டத்தை முடித்து, காஷ்மீர் ரஷியாவின் எல்லையில் இருப்பதால் அது சம்பந்தமாகவும் ஒரு சமரசம் ஏற்படுத்தவும் இன்றேல் ஐக்கிய தேச ஸ்தாபனத்தின் கவனத்திற்கு காஷ்மீர் பிரச்னையைக் கொண்டுவரவும் அவர் முயற்சிப்பார். மார்ச்சு மாதம அவர் இந்தியாவின் கவர்னர் ஜெனரல் பதவியிலிருந்து விலகிச்செல்லுமுன் இக்காரியத்தைச் செய்து முடிக்க உத்தேசித்திருக்கிறார்.

கிரி-சேனநாயக்கா கடிதப்போக்குவரத்து

கொழும்பு, டிச 14

இந்திய அரசாங்கத்தின் முதலாவது இலங்கை ஹை கமிஷனராக நியமனம் செய்யப்பட்டிருக்கும் திரு வி. வி. கிரிக்கு இலங்கைப் பிரதமர் திரு டி. எஸ். சேனநாயக்கா அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் "இந்த நியமனம் எனக்குச் சொந்த ஹோதாவில் உண்மையான சந்தோஷத்தைத் தருகிறது. ஏனெனில் என்னால் மிக அதிகமாக மதிக்கப்படும் ஒரு நண்பர், அத்துடன் இந்நாட்டு மக்களால் அதிகமாகக் கௌரவிக்கப்படும் ஒருவருடன் கலந்துகொள்வதற்கு எனக்கு இது ஒரு சந்தர்ப்பத்தைத் தருகிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

திரு கிரி இதற்குப் பதிலாக அனுப்பியுள்ள நன்றிச் செய்தியில "நீர் பிரதமராய் இருக்கும் போது இந்திய டொமினியனுக்கும் இலங்கைக்கும் இடையிலுள்ள நல்லெண்ணத் தொடர்புகள் அதிக பலத்துடன் வளர்ச்சியடையுமென நம்புகிறேன்" என்று கூறியுள்ளார்.

பிராண்டி மோசடி

கொழும்பு, டிச. 16

விஸ்கி, தேனீர் ஆகியவற்றைக் கலந்து அதை பிராண்டி என்று பெயரிட்டு விற்பனை செய்து வருவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இப்பிராண்டிப் போத்தல்கள் ஒழுங்காக லேபல் முதலியவற்றுடன் விளங்குகின்றன. இதன் விலை 15 ரூபாயிலிருந்து 20 ரூபாய் வரை இருக்கிறதாம. இம்மோசடிக்கு மூலனர் குடிவகை ஸ்டோரில் வேலை செய்த ஒரு ஊழியர் உடந்தையாய் இருக்காரு எனச் சொல்லப்படுகிறது.

ஆசியாவுக்கு டச்சு பிரதமர் பாய்ச்சல்

இந்தோனேஷிய விவகாரம்

கராச்சி, டிச. 15

டச்சு பிரதம மந்திரி டாக்டர் லூயிஸ பீல் பட்டேவியா செல்லும் மார்க்கத்தில் இன்று இங்கு விமானத்தில் வந்து இறங்கினார் இந்தோனேஷிய குடியரசு இதர இந்தோனேஷிய பகுதிகள் இவை சம்பந்தமாக அரசியல் ஒப்பந்தம் செய்து முடிக்கச் செல்வதாக அவர் கூறினார்.

கிழக்கு இந்தோனேஷிய பிரதமர்

பட்டேவியா, டிச. 15

செலிபஸ், மொலுகாஸ, சுண்டா தீவுகள் இவைகள் அடங்கிய கிழக்கு இந்தோனேஷியாவில் 28 வயதுள்ள அனக் அகஸ புதிய மந்திரி சபையை நிறுவினார்.

சென்ற வருடத்திலிருந்து இதுவரை ஒரு வருட காலத்தில் 4 மந்திரி சபைகள் ஏற்பட்டுவிட்டன. புதிய மந்திரி சபைக்கு 16 மந்திரிகள்.

விமான விபத்து

இந்தோனேஷிய குடியரசைச் சேர்ந்த விமானம் மலேயா மேலக் கடற்கரையிலுள்ள ஒரு கிராமத்தில் நொறுங்கி விழுந்தது.

சீனத்தில் டச்சுக்காரர்கள்

ஹேக், டிச 15

சீன உள்நாட்டு யுத்தத்தில் ஒரு டச்சு கிறிஸ்தவ குரு கொலைப்பட்டதால் சீனத்தில கிறிஸ்து மதப் பிரசாரம் செய்து வரும் டச்சு குருமார்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும என்று டச்சு அரசாங்கம் அறிவிக்கிறது.

சீனத்தில் 7 டச்சு கன்னிகாஸ்திரீகளும் இரு குருமார்களும் இருக்குமிடம் தெரியவில்லை.

டச்சுக் கப்பலை சீனர் கொள்ளையிட்டனர்

ஹாங்காங், டிச 15

தென் சீனக் கடற்கரையில் சீனக் கடற்கொள்ளைக்காரர்கள் பிரயாணிகளைப்போல ஒரு டச்சுக் கப்பலில் பிரயாணம் செய்து நடுக் கடலில் அக்கப்பலைக் கொள்ளையிட்டனர்.

கப்பல் விபத்து

வில்லமஸ்டட், டிச 15

டச்சு மேற்கு இந்தியத் தீவின் கடற்கரையருகே ஆர்ஜன்டைனா கப்பலொன்றும் வெனிஸ்வேலா கப்பலொன்றும் மோதி விபத்திற்குள்ளாயின. இரண்டும் எண்ணெய்க் கப்பல்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 எ, தட்டாரத் தெரு, கொழும்பு.
போன்: 3611.

சர்வஜித்து௵ மார்கழி மீ 3உ
வியாழக்கிழமை

பாரசீகம்!

சென்ற புதன்கிழமை பாரசீகப் பாராளுமன்றத்தில் பிரதிநிதிகள் தங்கள் பிரதம மந்திரி மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தார்கள். பிரதமர் திரு. காவம் சபையிலிருந்து வெளியேறினார் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இவ்வாரம் திங்கட்கிழமையன்று ஜனநாயகக் கட்சியின் புதிய தலைவராகிய சர்தார் ஹெகமாத் 38 அதிகப்படியான வாக்குகளால் பிரதமர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டார். இக்கட்டத்துடன் இரண்டு வருடகாலமாக ஈரானில் பிரதமராக இருந்த திரு. காவத்தின் பதவிக்குக் குழிவெட்டப்பட்டாயிற்று. எழுபது வயதிற்கு மேற்பட்ட திரு. காவம் உயர்குடிப் பிறப்பைச் சேர்ந்தவரும், பெரும் பணக்காரருமாவர். இவர் இதற்கு முன் பல முறைகளில் ஈரானின் பிரதம மந்திரியாகத் தொண்டு செய்துள்ளார். ஆயின் இப்பொழுது முடிவுபெற்ற பதவிகாலம் போன்று இதற்கு முந்திய காலங்கள் அவ்வளவு பிரசித்தி வாய்ந்ததும் முக்கியமானதுமாக அவருக்கு இருந்திருக்கவில்லை.

ஏராளம் எண்ணெய்க் கிடங்குகள் ஈரானில் உண்டு. இதன் காரணமாக உலக வல்லரசுகள் தங்கள் கண்ணோட்டத்தை அதன் மீது செலுத்தி வந்தன. இந்த எண்ணெய்தான் ஈரானுக்குப் பல கெடுதல்களையும் விளைத்துள்ளன. உலக வல்லரசுகள் எண்ணெய் தர்மகர்த்தாக்கள் என்று கூறிக்கொண்டு ஈரானில் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தியும் வந்துள்ளனர். இந்த எண்ணெய் தர்மகர்த்தாக்களின் ஆதிக்கத்திலிருந்து ஈரானை விடுவித்துக்கொள்ள திரு. றேஸா ஷாவால்கூட முடியவில்லை. எட்டு வருடங்களுக்கு முன்பு அந்நிய தர்மகர்த்தாக்களின் வலையிலிருந்து தப்பிக்கொள்ளுவதற்கு பாரசீகர் தேசியவாரம் கொண்டாடினார்கள். அதன் பயனாகப் பிரிட்டிஷ் யுத்தக் கப்பல் பாரேயினில் நங்கூரமிட்டது. இச்சம்பவத்தின் பிறகு திரு. றேஸாஷா தர்மகர்த்தாக்களை அகற்றும் செயலைக் கைவிட்டுவிட்டார்.

இரண்டாவது மகாயுத்தத்தில் ஈரான், ரஷியர்களுக்கும் ஆங்கில அமெரிக்கருக்கும் இடையில் துண்டாடப்பட்டிருந்தது. தேசிய ஆர்வமும் திடசித்தமும்கொண்ட ஒரு பிரதமர் திரு. காவத்திற்குப் பதிலாக இருந்திருந்தால் ஈரானின் நன்மையையிட்டு ஒரு தேசத்தை மற்றத் தேசத்தின் மீது போருக்கு இழுத்துவிட்டிருக்கலாம் பங்காளிகளாக இருப்பவர்களுக்கு இடையில் தீமூட்டுவது மிகவும் சுலபமல்லவா? ஆனால் பணக்காரனும், உயர்குடிப் பிறப்பாளனுமாகிய திரு. காவம் அதேஇனத்துடன்தான் சேர்ந்துகொண்டார். அதாவது அவர் ஆங்கில-அமெரிக்க ஆதிக்கத்தைத்தான் விரும்பினார். இக்காரணத்தால் ஈரானில் ஒரு பகுதியாகியஅஸர்பைஜான் ஈரானிலிருந்து விலகிக்கொள்ளவும் முயன்றது அஸர்பைஜான் பிரதேசத்தின் இந்த விருப்பத்திற்கு ரஷியர்கள் உதவி அளிக்கவில்லை. ரஷியர்கள் யாது காரணங்கொண்டு உதவியளிக்க மறுத்தார்கள் என்பதும் இன்றுவரைக்கும் மர்மமாகவே இருக்கிறது. ஆகவே அஸர்பைஜான் பிரிந்துகொள்ளவில்லை. இந்நிலைமை திரு. காவத்தின் மதிப்பை பன்மடங்காக உயர்த்திவிட்டது. சமீபத்தில் தெற்கு ஈரானில பிரிட்டிஷாருக்கு எண்ணெய் வசதிகள் கொடுக்கும் தேசியப் பிரச்னை ஏற்பட்டது. இதற்குச் சம்மதித்திருந்தால் திரு. காவம் மேலும் மதிப்பைப் பெற்றிருப்பார். ஆனால் அவர் 1946-ம் ஆண்டில் ரஷியாவிற்கும் ஈரானுக்குமிடையில் ஏற்படுத்தப்பட்ட எண்ணெய் ஒப்பந்தத்தை ஆதரிப்பதாகத் தோற்றமளித்தார். இது அவரது பதவிக்குக் குழிவெட்டிவிட்டது. எண்ணெய் தர்மகர்த்தாக்கள பிரதம மந்திரியின் தலையிலும் கைவைத்துவிட்டார்கள்.

மாறிச் செல்லும் உத்தியோகஸ்தர்

மட்டக்களப்பில் பிரியாவிடை

மட்டக்களப்பு, டிச. 13

மட்டக்களப்பு விவேகானந்த மண்டபத்தில் மட்டக்களப்பை விட்டு மாறிச் செல்லும் தங்கள் தலைவர் திரு ஸ்ரீஸ்கந்தராஜாவுக்கு மட்டக்களப்பு சைவ மகா சபையினர் ஒரு பிரியாவிடை அளித்தனர். திரு ஸ்ரீஸ்கந்தராஜா கொழும்பு பிரதம நீதிபதியாகக் கடமை புரிவதற்காகவே மட்டக்களப்பை விட்டு நீங்கிச் செல்வதாகத் தெரிகிறது.

கூட்டத்திற்கு சிவானந்த வித்யாலயத் தலைமை ஆசிரியர் எஸ். அம்பலவாணர் தலைமை வகித்தார். தலைவராலும் அவர் பின் பேசிய செல்வி கே சரவணமுத்து, கே. அருணாசலம், பண்டிட் ஏ. சபாபதி ஆகியோராலும் திரு ஸ்ரீஸ்கந்தராஜாவின் மேலான குணங்கள் மிகவும் புகழப்பட்டன.

அதன்பின் ஸ்ரீஸ்கந்தராஜாவும் அவர் பாரியாரும் இப்பாராட்டுதல்களுக்குப் பதில் கூறினார்கள். திரு கே கணபதிப்பிள்ளை எல்லோருக்கும் நன்றி தெரிவித்தார்.

ஒரு தேநீர் விருந்தும் விமரிசையாக நடத்தப்பட்டது.

இரு தேர்தல் ஆட்சேபனை மனுக்கள்

எதிரிகளின் ஆட்சேபனைகள் வாபஸ்

கொழும்பு, டிச. 17

கொழும்பு தென் பகுதி பாராளுமன்ற அங்கத்தினர் ஆர். ஏ. டி மெல்லின் தேர்தலை ஆட்சேபித்து பி. சரவணமுத்துவால் சமர்ப்பிக்கப்பட்ட தேர்தல் ஆட்சேபனை மனுவின் பேரில் போதியபிணைக்காசு கட்டப்படவில்லை என்று திரு டி மெல்லால் ஒரு ஆட்சேபனை கிளப்பப்பட்டது.

இவ்வாட்சேபனை செலவுக்காசுடன தள்ளுபடியாகிவிட்டது

ஊர்காவற்றுறைத் தேர்தலில் திரு. ஏ. வி. குலசிங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்ட தேர்தல் ஆட்சேபனை மனுவின் மீதும் இதேபோல் போதிய பிணைப் பணம் கட்டப்படவில்லையென்று ஊர்காவற்றுறை பாராளுமன்ற அங்கத்தினர் திரு. ஏ. எல். தம்பிஐயாவால் கூறப்பட்டது. ஆனால் அவர் பின் தமது ஆட்சேபனையை வாபஸ் வாங்கினார். இவ்வாட்சேபனையும் செலவு காசுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

கண்டித் தேர்தல் ஆட்சேபனை மனு

விசாரணை தொடர்கிறது

கொழும்பு, டிச. 17

கண்டித் தேர்தல் ஆட்சேபனை மனு சம்பந்தமான விசாரணை நேற்று நடைபெற்றது இவ் வழக்கில் டி. பி இலங்கரத்ன, ஜான்வீரசேகரா ஆகியோர் கண்டிப் பாராளுமன்ற பிரதிநிதி திரு. ஜியார்ஜ் ஈ. டி சில்வாவின் தேர்தல் முறையற்றதென ஆட்சேபித்துள்ளனர்.

திரு. இலங்கரத்ன, சார்ஜண்ட், ரத்நாயக, ஜியார்ஜ் டி கேசரம் ஆர். எல். வி. பெர்னாண்டோ, எம். எஸ். பி. சமரசிங்க, கே. டி. கருணாரத்ன முதலியோர் நேற்று இவ் வழக்கில் சாட்சியம் கொடுத்தனர். விசாரணை இன்றும் தொடர்ந்து நடைபெறுகிறது.

வால் நட்சத்திரம்

அச்சுவேலி, டிச 15

சந்திரனுக்குப் பக்கத்தில் இன்று ஓர் வால் நட்சத்திரம் தென்பட்டது. அதன் வால் பார்வைக்கு மிகவும் பிரகாசமாயும் 4-5 அடி நீளமுள்ளதாகவும் காணப்பட்டது. யாவரும் மிக எளிதில் காணக்கூடியதாய் துலாம்பரமாய்த் தெரிந்தது.

(ந-நி)

கல்கத்தா வாசிகள் காட்டிய கட்டிலடங்கா அன்பு

பண்டித நேருவைப் பதறடித்துவிட்டது

உத்தமத் தலைவர் பேச்சைக் கேட்க பத்து லட்சம் ஜனங்கள் தத்தளிப்பு

"மக்களை திருப்தி செய்யாவிடில் மாபெறும் புரட்சி ஏற்படும்"

அரசாங்கத்தின் கடமை பற்றி சர்தார் எச்சரிக்கை

ஹைதராபாத் பிரஜைகள் சுதந்திரப்போருக்கு மகாராஷ்டிர மாகாணத்தின் ஆதரவு

கல்கத்தா, டிச. 16

'மகாஜனங்களே! நான் கொஞ்சம் பயந்து நடுங்கிவிட்டேன். எவ்வித அபாயங்களையும் சமாளிக்க எனக்குத் தெரியும். ஆனால நீங்கள் என்மீது காட்டிய அளவிலா உங்களது அன்பை என்னால் தாங்க முடியவில்லை"

பண்டிதநேரு கல்கத்தாவுக்கு விஜயம் செய்துவிட்டு, கான்பூர் வழியாக டில்லிக்குப் புறப்படுமுன் கல்கத்தா மகாஜனங்களுக்கு மேற்கூறிய செய்தியை விடுத்தார்.

10 லட்சம் ஜனத்திரள்

இந்தியாவின் பிரதம மந்திரி ஐரோப்பிய வர்த்தக சம்மேளனத்தில் பிரசங்கம்செய்ய கல்கத்தாவுக்கு விஜயம் செய்தபோது கல்கத்தா மைதானத்தில் ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பண்டித நேருஜியைக் காணவும் அவரது சொற்பொழிவைக் கேட்கவும் மைதானத்தில 10லட்சம் ஜனங்கள் கூடியிருந்தனர்.

ஒலிபெருக்கிக் கருவி சரியாக வேலை செய்யாததாலும் நேருஜி பிரசங்கத்தைக் கேட்க ஜனங்கள் துடிதுடித்துக் கொண்டிருந்ததாலும்கூட்டத்தில்இரைச்சல் ஏற்பட்டது.

பண்டிதநேரு தமது சக்தி முழுவதும் செலவிட்டு தனது முடிந்தவரை 45 நிமிஷ நேரம் உரக்கப் பேசினார். 10 லட்சம் பேருக்கும் அவரது சப்தம் எட்டமுடியாதிருந்ததால் கூட்டத்தில் பலர் ஜனங்களை நெருக்கிக் கொண்டு பிரசங்க மேடையருகே வரமுயன்றனர் இதனால் ஏற்பட்ட பெருமசந்தடியால் கூட்டத்தை சாந்தப்படுத்த முடியவில்லை. ஆகவே பொதுக்கூட்டம் கைவிடப்பட்டது. சமாளிக்க முடியாத நெருக்கடி ஏற்படவே பண்டித நேரு மேடையைவிட்டு இறங்கி கூட்டத்தின் மத்தியில் வழியை விலக்கிக் கொண்டு அரசாங்க மாளிகைக்குத் திரும்பி விட்டார். ஜனநெருக்கத்தின் மோதுதலால பலர் காயமடைந்தனர்.

கூட்டம் ஆரம்பிக்கும்போது பண்டிதநேருமீது இரு ஆகாய விமானங்கள் ஆகாயத்திலிருந்து புஷ்பமாரி பொழிந்தன.

பொதுக்கூட்டத்தில் பேச முடியாது போகவே பண்டித நேரு, நேராக ரேடியோ நிலயம் சென்று அளவு மீறிய ஜனங்கள் கூடியிருந்ததால, கூட்டத்தைச் சமாளிக்கச் செய்திருந்த ஏற்பாடுகள பயன்படவில்லையென்றும் அப்பிரமாண்டமான கூட்டத்தைக் கண்டு தனக்கு அளவற்ற உற்சாகம் மேலிட்டதாகவும் ஒலிபரப்பு பிரசங்கம் செய்தார்,

பண்டித நேரு இங்கிருந்து கான்பூருக்குப் பயணமானார். இன்று மாலை டில்லிபோய் சேருவார்.

கான்பூரில்

இன்று கல்கத்தாவிலிருந்து வந்திறங்கிய பண்டித நேரு புஷ்பத் தோட்ட மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசினார். இரண்டு லட்சம் ஜனங்கள் கூடியிருந்தார்கள், பண்டித நேரு கூறியதாவது:-

பாரத நாட்டை பலமுள்ளதாகவும், வளமுடையதாகவும் ஆக்குவதற்கு தேசியப் புனருத்தாரண வேலைத் திட்டங்களில நாம நமது முயற்சிகளையும் சக்திகளையும செலுத்த வேண்டும். அதற்காக நாம் நமது நாட்டின் உட்புறத்திலும வெளிப்புறங்களிலுமிருந்து உண்டாகும் எதிர்ப்புகளையும் கஷ்டங்களையும் திறமையுடனும் தைரியமுடனும்சமாளிக்க உறுதியாக இருப்போம். நம் நாடு புரட்சிகரமான மாறுதல்களை அடைந்துள்ளது. பல விதமான வெற்றிகளையும் தோல்விகளையும் அனுபவித்து விட்டது. இந்த ஒன்றரை வருட காலத்தில் நம நாட்டில் நான் ஆனந்த பரவசமடையக் கூடிய சம்பவங்களும் ரத்தக் கண்ணீர் வடிக்கக் கூடிய சம்பவங்களும் நிகழ்ந்திருக்கின்றன. ஆனால் பாமர மக்கள் மீது என் இருதயத்தில் பொங்கி வடியும் அன்புப் பெருக்கே நான் தைரியமாகவும் ஊக்கமாகவும் மேலும பெரும் பெரும் முயற்சிகளைச் செய்ய என்னைத் தூண்டிக் கொண்டிருக்கிறது.

சர்தார் படேல்

புதுடில்லி, டிச. 16

இந்தியாவின் உதவிப் பிரதம மந்திரி சர்தார் வல்லபாய் படேல் நாகபுரியிலிருந்து இன்று டில்லி வந்து சேர்ந்தார் ஒரிஸா சமஸ்தானங்களை இந்திய யூனியனில் சேர்த்துவிட்டு வெற்றிகரமாகத் திரும்பிய சர்தார் படேல் பின்வருமாறு தெரிவித்தார்:-

முன்னர் வெகு தூரத்திலிருந்த இடங்கள் எல்லாம் இப்பொழுது துரிதமான போக்குவரத்து சாதனங்களால் மிகவும் அருகில் இருக்கின்றன. ஆகவே பொதுஜனங்கள் அரசாங்க நிர்வாகத்தின் மூலம் ஏற்படும் வசதிகளையெல்லாம் சுலபமாகத் தெரிந்து கொள்ள முடியும் ஆதலல் அக்கம் பக்கங்களிலுள்ள நாடுகளில் அந்நாடுகளின் அரசாங்கங்களால் ஏற்படும் வசதிகளையெல்லாம் நாமும் நமது மக்களுக்கு அளிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளையெல்லாம் சற்றும் காலதாமதமின்றி எடுத்துக் கொள்ள வேண்டும். தாமதம் செய்தால் பொதுஜனங்களிடையே அதிருப்தியே அதிகரிக்கும். அதிருப்தி ஏற்பட்டால் குழப்பங்கள் உண்டாகும். அக்குழப்பங்களை தற்காலிகமாக அடக்க முடியும் ஆனால் ஜனங்களின் சீர்திருத்த வேட்கையை எவ்வித பலாத்கார சாதனங்களைக் கொண்டும் அடக்க முடியாது. சமஸ்தான மன்னர்கள் இதை உணர வேண்டும்.

ரெவின்யூ மந்திரிகள் மகாநாடு

இன்று டில்லியில் மாகாண ரெவின்யூ மந்திரிகளின் மகாநாடு நடைபெற்றது. இந்திய அரசாங்கத்தின் உணவு, விவசாய மந்திரி டாக்டர் ராஜேந்திர பிரசாத் தலைமை வகித்தார்.

அந்தமானில் அகதிகள் குடியேற்றம்

பஞ்சாப் கலகத்தில் ஏற்பட்ட அகதிகளை அந்தமான் தீவுகளில் குடியேற்றுவதைக் குறித்து இந்திய அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது

பிரிட்டிஷ் கல்லறை நிர்வாகச் செலவு

இந்தியாவிலும் பாகிஸ்தானிலுமுள்ள பிரிட்டிஷ் கல்லறைகளின் நிர்வாகப் பொறுப்பை பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பாக இந்தியாவிலும் பாகிஸ்தானிலுமுள்ள பிரிட்டிஷ் ஹை கமிஷனர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்தியா சுதந்திரம் அடையும் வரை அக்கல்லறைகளின் நிர்வாகச் செலவுகளை இந்திய அரசாங்கம் கொடுத்து வந்தது.

ஹைதராபாத் மக்கள் சுதந்திரப்போர்

புனா, டிச. 16

ஹைதராபாத் சமஸ்தானத்தில் பொறுப்பாட்சி நிறுவும்படி கோரி ஹைதராபாத் சமஸ்தான காங்கிரஸ் ஆரம்பிக்கும் வரிகொடா இயக்கத்தை மஹாராஷ்டிர மக்கள் ஆதரிப்பார்கள் என மஹாராஷ்டிர மாகாண காங்கிரஸ் கமிட்டி தீர்மானித்தது.

ஹைதராபாத் இடைக்கால அரசாங்கம்

ஹைதராபாத, டிச. 16

14 மந்திரிகளைக் கொண்ட இடைக்கால அரசாங்கம் ஒரு வருட காலத்திற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது 14 மந்திரிகளில் 6 பேர்கள் நியமனம செய்யப்பட்டவர்கள். மீதமுள்ள 8 மந்திரிகளில் 4 பேர்கள் முஸ்லிம் கட்சியைச் சேர்ந்தவர்கள் 4 பேர்கள் ஹிந்துக்கள்.

இந்திய ரயில்வேக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டிருப்பதால் அந்த அளவுக்கு ஹைதராபாத ரயில்வே கட்டணங்களும் உயர்த்தப்பட்டிருக்கின்றன.

பம்பாய் சமஸ்தானங்கள்

கோலாப்பூர், டிச 16

அகில இந்திய சமஸ்தான பிரஜைகள் மகாநாட்டின் தட்சிணப்பகுதி சமஸ்தான பிரஜைகளின் கிளை மகாநாடு இன்று இங்கு நடைபெற்றது. தட்சிணப்பகுதி சமஸ்தானங்கள் தங்களுக்குள் ஒரு ஐக்கியம் ஏற்படுத்திக் கொள்ள முயல்வது ஜனநாயக முறைக்கு விரோதமென்றும், தக்ஷிணப் பகுதியைச் சேர்ந்த எல்லா சமஸ்தானங்களும் (கோலாப்பூர் உட்பட) பம்பாய் மாகாணத்தில் சேர்ந்துவிட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஜுனாகத் வாக்கெடுப்பு

மேற்கு இந்திய சமஸ்தானங்களின் கமிஷனர் என். எம். பூச். பம்பாயிலிருந்து விசேஷ அதிகாரி வந்ததும் ஜுனாகச் சமஸ்தானத்தில் பொதுஜன வாக்கெடுப்பு நடைபெறும என்று பத்திரிகா நிருபர்களிடம் தெரிவித்தார்.

பங்களூர் நிலைமை

பங்களூர், டிச. 16

பொதுவான அமைதி நிலவி வருகிறது. ஊரடங்குச் சட்டப்பிரயோக நேரத்தில் சில இடங்களில் இன்று பிற்பகல் பங்களூர் நகரில சில சம்பவங்கள் நிகழ்ந்தன. ஊரடங்கு நேரம் கழிந்ததும் இன்று காலை இரு கத்திக்குத்து சம்பவங்கள நடைபெற்றன பலர் கைது செய்யப்பட்டார்கள். இங்கு நடைபெற்ற வகுப்புக் கலகத்தில் இதுவரை 11 பேர்கள கொல்லப்பட்டனர். 91 பேர்கள் கைதியாயினர்.

ஆஜ்மீரில்

ஆஜ்மீர், டிச. 16

இங்கு நடைபெற்ற கலகத்தில் கலகக்காரர் கடைகளைக் கொள்ளையிடும் போது துருப்புகள் சுட்டதால் பத்து பேர்கள் மாண்டனர். இரு போலீசாரும் மாண்டனர். ஒரு வீட்டுக்குள் 5 பிரேதங்கள் கண்டெடுக்கப்பட்டன ஊரடங்குச் சட்டமும் ராணுவ பாதுகாவலும் இருந்து வருகின்றன

அரசாங்க ஊழியர் வேலைநிறுத்தம்

சென்னை, டிச. 16

நேற்று ஆரம்பமான சென்னை அரசாங்க கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள் வேலைநிறுத்தம் இன்றும தொடர்ந்து நடைபெறுகிறது.

டிசம்பர் 17-ம் தேதிக்குள் வேலைக்குத் திரும்பாவிடில் அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள என்று அரசாங்கம் அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

வேலைநிறுத்தம் அரசாங்க மத்திய காரியாலயத்தையும உணவு பங்கீடு காரியாலயங்களையும் பாதிக்கவில்லை. உயர்தர உத்தியோகஸ்தர்களும் புதிதாக சேர்க்கப்பட்டுவரும் ஊழியர்களும் வேலைநிறுத்தம் செய்துவரும் கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள் வேலைகளைச் செய்து வருகிறார்கள்.

நேபாளத்தில் இந்திய ஸ்தானிகர்

புதுடில்லி, டிச. 16

நேபாளத்தில் இந்திய ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள சர்தார் முஞ்சிஜியா 10-ம் தேதியன்று காட்மாண்ட் நகரில் நேபாள மன்னரிடம் அத்தாட்சிப் பத்திரத்தை சமர்ப்பித்து ஸ்தானிகர் பதவியை ஏற்றுக்கொண்டு அத்தாட்சிப் பத்திரத்தை சமர்ப்பிக்கையில் அவர் பின்வருமாறு தெரிவித்தார்:-

இந்திய ராணுவத்தில கூர்க்கா துருப்புகள் தொடர்ச்சியாக இருந்து வருவது இந்தியாவுக்கும் நேபாளத்திற்கும் பூர்வீக காலந்தொட்டு இருந்துவரும் உறவை உறுதிப்படுத்துகிறது கூர்க்க வீரர்களின் தீரம் உலகப்பிரசித்தி பெற்றது. இந்தியாவும் நேபாளமும் அமைதியை நிலைநாட்ட ஐக்கியமுடன் முயற்சிசெய்யும். அகில ஆசிய நாடுகளின் சமஷ்டியை ஏற்படுத்தவும் இரு நாடுகளும் ஐக்கியமாக வேலைசெய்யும்.

மிருக பலியை நிறுத்த மசோதா

சென்னை, டிச. 19

கோவில்களில் மிருக பலியை தடுக்க ஸ்ரீ எஸ். பி. ஆதித்தன் எம். எல். சி. ஒரு மசோதா கொண்டுவர நோட்டீஸ் கொடுத்திருக்கிறார். அடுத்த புதன்கிழமையன்று மசோதா பிரசுரிக்கப்படுமென்று தெரிகிறது.

இந்த மசோதாவின் நோக்கங்களபற்றி கூறும் பகுதியில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

'மிருக பலியை நிறுத்த வேண்டுமென்ற உணர்ச்சி இந்த மாகாண ஹிந்துக்களிடையே வளர்ந்து வருகிறது. பல இடங்களில பொதுஜன அபிப்பிராயத்தின் விளைவாக இப்பழக்கம் தடை செய்யப்பட்டு விட்டது திருவாங்கூரில் இந்த பழக்கம் முற்றிலும நிறுத்தப்பட்டுவிட்டது பொதுஜன அபிப்பிராயத்திற்கேற்றபடி சட்டம் இயற்ற வேண்டிய காலம் வந்து விட்டது இந்தக் காரணங்களை முன்னிட்டு ஹிந்து கோவில்களில் மிருக பலியை தடை செய்ய இந்த மசோதா கொண்டு வரப்படுகிறது" என்று மசோதா கூறுகிறது.

மூன்று புதிய மின்சார யந்திரங்கள்

அடுத்த மார்ச்சில் மின்சாரத் தட்டுப்பாடு ஒழியும்

கொழும்பு, டிச. 17

இன்று அமெரிக்காவில் இருந்து மூன்று மின்சார யந்திரங்கள் இலங்கைக்கு வந்து சேருமென்று தெரிகிறது. இதன் காரணமாக அடுத்த மார்ச்சு மாதத்திற்குள் ஜனங்களின் தேவைக்குவேண்டிய மின்சார யந்திரங்களை அனுமதிக்கப்படும். ஆனால் பெப்ரவரியில் சுதந்திர தினவிழாக் கொண்டாட்டத்திற்கு முன் யந்திரங்கள் வேலைசெய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் அலுவல்கள் துரிதமாக நடைபெறும். இவ்விழாவுக்கு இந்த யந்திரங்களின் உதவி கொண்டு மின்சார தீபாலங்காரம் மிக உயர்ந்த முறையில் செய்யப்படவேண்டும் என்று போக்குவரவு இலாகா மந்திரி கொத்தலாவல கூறியுள்ளார்.

பிரதமர் பாகிஸ்தான் செல்லுவார்

சாஞ்சிக்குச் சமூகமளிப்பார்

கொழும்பு, டிச. 17

இலங்கைப் பிரதமர் திரு டி. எஸ சேனநாயகா புதுடில்லியில் பண்டித நேருவுடன இலங்கை இந்தியப் பிரச்னை சம்பந்தமாகப் பேசிய பின்னர் பாகிஸ்தான் செல்லுவார் என்று அறியப்படுகிறது. டில்லி போகும் வழியில சாஞ்சியில் செட்டிய கிரி விகாரையின் அஸ்திவாரக்கல் நாட்டு விழாவில் அவர் பிரசன்னமாய் இருப்பார். இவ்விழா போபால மன்னரால் நடத்திவைக்கப்படும்.

கொலை செய்தபின் தூக்கிவிட்டனரா?

கணவனும் மனைவியும் கைது

கொழும்பு, டிச. 17

நோர்வூட்டில் உள்ள அபெர்காணித தோட்டத்தில்அங்கம்மா என்னும் மாது தூக்கிக் கிடக்கக் காணப்பட்டாள். இப் பெண் கந்தன் கங்காணி என்பவரின் ஆசைநாயகி எனத் தெரிகிறது.

மரண விசாரணையின்போது பிரஸ்தாப பெண் இறந்தபின் தூக்கிலிடப்பட்டதாக டாக்டரால் கூறப்பட்டது. வயிற்றில் உதையுண்டே இறந்திருக்க வேண்டும் என்று அவர் அபிப்பிராயப்பட்டார்.

கந்தனும் அவரது மனைவியும் சந்தேகத்தின் பேரில் இது சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

மதுபான ஒழிப்புப் பிரசாரம்

பன் மதத்தினரும் ஒன்று சேர்ந்தனர்

மட்டக்களப்பு, டிச. 17

புளியந்தீவு மெதடிஸ்ட் தேவாலயத்தின் ஆதரவில் மதுபான ஒழிப்புக் கூட்டம் ஒன்று மத்தியக் கல்லூரி ஆசிரியர் சேது காவலர் தலைமையில் முற்றவெளியில் நடத்தப்பட்டது இக் கூட்டத்தில் இந்துக்கள், முஸ்லிம்கள், பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள் ஆகிய எல்லோரும் கலந்துகொண்டனர். பி. ஸ்ரீஸ்கந்த ராஜா, செல்வி, அடிகின்ஸ், யூசுப் சாஹிப், எப் என். ராஜசிங்கம் ஆகியோர் இக்கூட்டத்தில் பேசினர். சங்கை. ஜேம்ஸ் எஸ் மேதர் நன்றி கூற இக் கூட்டம் முடிவுற்றது.

ஆப்பிரிக்காவில் மாண்ட்கோமரி

லண்டன், டிச. 16

பிரிட்டன் இந்திய ராணுவத்தை இழந்துவிட்டதால ஆப்பிரிக்கர் ராணுவத்தைத் திரட்ட பிரிட்டன் முயற்சிப்பதாகத் தெரிகிறது இப்பொழுது தென்னாப்பிரிக்காவிற்கு விஜயம் செய்துள்ள பிரிட்டிஷ் ராணுவத் தலைவர் பீல்டு மார்ஷல மாண்ட் கோமரி அங்கு பேசியபோது, "எதிரிகள் நம்மைத் தாக்கினால் அவர்களை நாம் ஐக்கியமாக எதிர்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவே இங்கு வந்திருக்கிறேன்" என்றார். மாண்ட் கோமரியின் ஆப்பிரிக்கர் ராணுவத் திட்டத்திற்கு தென்னாப்பிரிக்க பிரதம மந்திரி ஆதரவளிக்கிறார். வரப்போகும் பொதுத் தேர்தலில் அரசியல் கட்சிகள் இதை ஒரு பிரச்னையாகக்கொண்டு தேர்தல் நடத்தும்.

இந்தியாவில் பொதுத்தேர்தல்

கல்கத்தா, டிச. 16

பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் ஒரு கேள்விக்குப் பதில் அளித்து பண்டித நேரு சொன்னதாவது:- 1948 முடிவில் அல்லது 1949 ஆரம்பத்தில் பொதுத்தேர்தல் நடக்கலாம். ஏப்ரலில் அரசியல்நிர்ணயசபை கூடி இறுதியாக அரசியலை நிறைவேற்றும் வரை விவாதம் நடைபெறும்.

தென்னிந்திய வர்த்தகர்-வி. வி. கிரி சந்திப்பு

சென்னை, டிச. 16

ஸ்ரீ வி. வி. கிரி தென்னிந்திய வர்த்தக சங்கத்தினரை டிசம்பர் 17-ம் தேதி சந்திப்பார்

இந்திய-இலங்கை சம்பாஷணைகளில் கலந்துகொள்வதற்காக டில்லிக்குப்போகும் மார்க்கத்தில் ஸ்ரீ வி. வி. கிரி இலங்கையிலிருந்து இன்று சென்னைக்கு வந்து சேர்ந்தார்.

பிராபோர்ன் தம்பதிகள்

லண்டன், டிச 16

இவ்வருட கிறிஸ்மஸ் பண்டிகையை டில்லியில் கொண்டாட இன்று இந்தியா கவர்னர் ஜெனரல் லார்டு மவுண்ட்பேட்டனின் மகளும் மருமகனுமான லேடி பிராபோர்னும் லார்டு பிராபோர்னும் டில்லிக்குப் பயணமானார்கள்.

லண்டனிலுள்ள சுவிட்ஜர்லந்து ஸ்தானிகர் இன்று டில்லிக்குப் பயணமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களப் பத்திரிகைகள் கூறுவதென்ன?

உணவுப் பொருட்களில் அரசாங்க வர்த்தகம்

சீனியில் லாபம், அரிசியில் நஷ்டம்

பழைய அரசாங்கசபைத் தீர்மானத்திற்கு விரோதமான நடவடிக்கை

செவ்வாய்க்கிழமை பிரசுரமான "சிங்கள ஜாதிய" எழுதியிருப்பதின் ஆசிரியத் தலையங்கம் பின்வருமாறு:-

புதிய அரசாங்கத்தில் முதலாவது வரவு செலவுத் திட்டம் பொது மக்களுக்குப் பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறதென்றே சொல்லவேண்டும். இதற்கு முந்திய வருடங்களில் தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தைப் போன்றே இதுவும் இருப்பது ஒரு ஆச்சரியந்தான்.

ஸர் ஒலிவர் குணதிலகா பொக்கிஷ மந்திரியாய்ப் பதவி வகித்ததிலிருந்து இத்தேசத்தின் செல்வ நிலைமையின் சுவரூபத்தைப் பொது மக்களுக்கு அறிந்துகொள்ளுவதற்கு எப்படியும் அவகாசம் கிடைக்கவில்லை. இத்தேசம் ஜனநாயக முறையில் ஆளப்படுகிறதென்று சொல்லப்பட்டால் தேச நிர்வாகத்தின் முக்கிய பொது விஷயங்களைப் பொது மக்கள் நன்ருக அறிந்தாகவேண்டும்.

அதாவது பார்லிமெண்டிலே அங்கத்துவம் வகிக்கும் பொது ஜனப் பிரதிநிதிகள் தேசத்தின் செல்வ நிலைமைபோன்ற முக்கிய விஷயங்களை நன்ருக அறிந்து அவற்றைப் பின்பற்றி தத்தம் தொகுதிகளிலுள்ள மக்களுக்கு சரியான நிலைமையை எடுத்துக்காட்டி அவர்களின் விருப்பு வெறுப்பை அறியவேண்டியது அவசியம்.

தேச நிர்வாகத்தின் பிரதான அம்சம் பொக்கிஷமேயாகும். எனவே பொக்கிஷ நிலைமையை-தேசிய வருமானத்தை-சரியானபடி அறியாமல், ஏதோ ஒரு வழியாக வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்து சமாளிக்க முயற்சிப்பதால் மாத்திரம் அரசாங்கம் சீராய்விடாது.

வரவு செலவுத் திட்டத்தினுல் தேசத்தின் பொக்கிஷ நிலைமையை பொது மக்களுக்கு நன்கறிந்துகொள்ள முடியும். எனினும், துரதிர்ஷ்டவசமாக, இதற்கு முன்னுள்ள வரவு செலவுத் திட்டத்தைப்போன்று தான் புதிய வரவு செலவுத் திட்டமும் இருப்பதால் தேசத்தின் உண்மையான செல்வ நிலைமையை அறிந்துகொள்ள முடியாமலிருக்கிறது.

உணவுப் பொருட்களுக்காக அரசாங்கம் எவ்வளவு செலவு செய்கிறது? சீனி விற்பனையால் அரசாங்கத்திற்குக் கிடைக்கிற லாபம் எவ்வளவு? மற்றும் எந்தெந்தப் பொருட்களில் லாபம் அல்லது நஷ்டம்? என்னும் விஷயங்கள்பற்றி பொதுமக்களுக்கு எதுவும் தெரியாது. உணவுப் பொருட்கள் சம்பந்தமாகவிலையைக்குறைத்திருப்பது என்பது வெறும் ஏமாற்றமா? அன்றேல் விஷயத்தைத் தெளிவாகப் பொது மக்களுக்கு எடுத்துக் காட்டுவதற்கு அரசாங்கம் பின்வாங்குவது எதற்காக? சரியான நிலைமையை எடுத்துக் காட்டுவதற்கு முடியுமாயின் உடனே அப்படி செய்யாததின் மர்மமென்ன?

தினசரி அதிகரித்துக்கொண்டு தேசியக் கடன் பளுவால் தேசமுழுவதும் வறுமையிலாழ்ந்துகொண்டு வருகிறது. இந்தக் கடன் தொகையில் பெரிய தொகை கிடைக்கப் போகிற வருமானத்தினுல வெட்டப்பட்டுவிடுமென்று சிலர் எடுத்துக்காட்டுகின்றனர். முக்கியமாக உணவுப் பொருட்கள் சம்பந்தமாக அதிகரிக்கப்பட்டிருக்கும் வரி விகிதத்தினுல், மிகவும் படுமோசமான நிலைமை ஏற்பட்டுவிடுமென்று தெரிகிறது.

இம்மியளவேனும் நெஞ்சிரக்கமற்ற கள்ள மார்க்கெட் வியாபாரிகள், புதிய வரவுசெலவுத் திட்டத்தை முன்கூட்டியே அறிந்துகொண்டபடியினுல் அவர்கள் பொருட்களின் மீது கொள்ளை லாபம் அடிக்க எத்தனித்துவிட்டார்கள். வரவு செலவுத் திட்டம் சம்பந்தமான இரகசியம் முன்கூட்டியே அம்பலத்திற்கு வர நேரிட்டது மிகவும் இழிவானதென்றே சொல்லவேண்டும். இதைப்பற்றி பொது ஜன எதிர்ப்பும் வெறுப்பும் எவ்வளவென்று சமீபத்தில் பார்லிமெண்டில் நடந்த விவாதங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். மேற்படி கள்ள மார்க்கெட் வியாபாரிகளுக்கு முன்கூட்டியே பாங்குகளிலிருந்து மேலதிகமான பணத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்கு அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் அறியக்கிடக்கிறது.

"லங்கா தீப" (13-12-47 எழுதும் ஆசிரியத் தலையங்கம் பின்வருமாறு:-

தத்தம் சொந்த காரியங்களில் எப்படி நடந்து கொண்டாலும், பொது மக்கள் சம்பந்தமான காரியங்களில் பொது ஜனப் பிரதிநிதிகளின் அபிப்பிராயத்தை அறியாமல் செய்வது பெரியதோர் தவருகும். சென்ற அரசாங்கம் கையாண்டுவந்த இத்தகைய பிழையான வழிகளை புதிய அரசாங்கமும் தொடர்ந்தும் பின்பற்றி வருவது முன்னையதிலும்பார்க்க பெரிய தவருகும்.

சீனியில் லாபத்தை பெற்று அரிசியிலேற்படும் நஷ்டத்தை தீர்ப்பது அப்பிழையான வழிகளில் ஒன்ருகும். அரசாங்கம் அரிசியை வாங்கி குறைந்த விலைக்கு பொது மக்களுக்கு விநியோகம் செய்து, அதனுலேற்படும் நஷ்டத்தை கணக்கெடுத்து, எவ்வளவென்று பொக்கிஷ காரியாலயத்திற்கு அறிவிக்க வேண்டுமென்பது சென்ற அரசாங்க சபையின் தீர்மானமாகும். 1944-ம் வருடம்வரைக்கும் இப்படியேற்படும் நஷ்டத்தை வருமானத்திலிருந்து கழித்து காட்டப்பட்டதெனினும், இதன் பிறகு அப்படி கணக்கு காட்டுவதை நழுவவிடப்பட்டிருப்பதாக வரவு செலவு விவாதத்தின் போது திரு. இறேஷியன் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிருர்.

இப்படிச் செய்திருப்பதானது, ஏற்படும் நஷ்டத்தை சீனியிலிருந்து கிடைக்கும் லாபத்தினுல் வெட்டி, மிஞ்சியிருப்பதை ஆதாயமாகக் காட்டுவதாய் இருந்தது. அரசாங்க சபையின் தீர்மானத்திற்கு மாருக வேருென்றைச் செய்வது மந்திரி சபையின தான்தோன்றித்தனமே. அதேமாதிரி வியாபாரிகள் கூட செய்யாதபடி சீனி விலையை அதிகரித்து மாதமொன்றுக்கு 20 லட்சம் லாபத்தை உண்டாக்கியது முன்னதிலும் பார்க்க பெரிய தான்தோன்றித்தனமாகும்.

உணவுப்பொருட்கள் சம்பந்தமான கொடுக்கல் வாங்கலில் இதுவரைக்கும் அரசாங்கத்திற்கு 12 கோடியே 30 லட்சம் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. திரு ஜயவர்த்தன சமர்ப்பித்திருக்கும் வரவு செலவுத் திட்டத்தின்படி உணவுப் பொருட்களினுல் ஏற்படும் நஷ்டத்தை இங்கிலாந்திலிருந்து கிடைக்கும் கடனிலிருந்து தீர்ப்பதற்கு நினைத்திருப்பதாகத் தெரிகிறது.

ஆகாரப் பொருட்களினுல் ஏற்படும் நஷ்டத்தை சரிக்கட்டவேண்டியதாயின், வரிகளைக் கூட்டியிருக்கலாம். முக்கியமாக பெரும் பணக்காரர்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்ட பொருட்களின் மீது வரியைக் கூட்டியிருக்கலாம்! அப்படிச் செய்யாமல் ஏழைகளுக்கு பளுவாய் இருக்கக்கூடிய வகையில் செய்திருப்பது கூடாது.

எப்படியாயினும் பொதுஜனப் பிரதிநிதிகளின் சம்மதத்தை அறியாமல் இப்படியான தான்தோன்றித்தனங்கள் செய்வது சரியா?

பிஸ்கால் காவலிலிருந்து தப்பி ஓடினுர்

ஒன்றரை வருடக் கடுழியம்

சாவகச்சேரி, டிச. 15

சாவகச்சேரி பிஸ்கால் காவலிலிருந்து தப்பியோடிய கைதி குமரேசு என்பவர் ஓமந்தையில் தலை மறைவாகத் திரிந்த பொழுது பிஸ்கால் காவலாளர் பஞ்சாட்சரம், தம்பியையா, மாணிக்கம் என்பவர்கள் தேடிச்சென்று நடுராத்திரிவேளையில் படுக்கையில் விட்டுக் கைவிலங்கு பூட்டியபொழுது குமரேசு என்பவரும் அவருடைய கூட்டாளிகளுமாக காவலாளிகளுக்கு அடித்தும் கடித்தும் படுகாயப்படுத்தி விட்டு காட்டிலே கை விலங்குடன் ஓடிவிட்டார். குறித்த கைதி குமரேசு என்பவரை சாவகச்சேரிப் போலிஸ இன்ஸ்பெக்டர் திரு. ப. முருகேசு என்பவர் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஆஜர்படுத்திய பொழுது நீதிபதி பிஸ்கால் காவலிலிருந்து தப்பியோடிய குற்றத்திற்கும், போலிஸ பகுதியார் இன்னுேர் கைதியைப் பிடிக்க சென்றபொழுது இவர் தடை செய்த குற்றத்திற்குமாக ஒன்றரை வருடக் கடுழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

[சு-நி]

வெங்காயம் உருளைக் கிழங்கு இறக்குமதி

தடை ரத்து செய்யப்பட்டு விட்டது

கொழும்பு டிச 16

சுகாதார ஸ்தலஸ்தாபன மந்திரியார் அவர்கள் வெங்காயம் உருளைக்கிழங்கு முதலியவற்றை இறக்குமதி செய்வதின் மீது விதித்திருந்த தடையை ரத்துச் செய்துவிட்டார். மேற்படி விஷயம் குவாரண்டைன் இலாகாவினுல வர்த்தகர்களுக்குப் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது.

சட்டவிரோதமாக மது விற்ருராம்

பெண்மீது ரூபா 30 அபராதம்

மட்டக்களப்பு, டிச. 17

மட்டக்களப்பின் புதிய மஜிஸ்டிரேட் எம். எம். மஃரூப், செல்லத்துரை ராஜமணி என்னும் மாதுக்கு ரூபா 30 அபராதம் விதித்துள்ளார். சட்டவிரோதமாகக் கள் விற்றதாக இப் பெண்ணின்மேல் குற்றம் சாட்டப்பட்டது. எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார். இவர் இலாமுனையைச் சேர்ந்தவர் என்று தெரிகிறது.

கஞ்சா புகைத்தவருக்கு ரூபா 25 அபராதம்

மட்டக்களப்பு டிச 16

ஜோஸப் சவரியார் என்ற கள்ளிறக்கும் தொழிலாளிமீது கஞ்சா சுருட்டுப் புகைத்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டது. எதிரிக்கு ரூபா 25 அபராதம் விதிக்கப்பட்டது.

கொலை!

ஒருவர் கைது

கொழும்பு, டிச. 16

போப்பிட்டிய தோட்டத்தில் டபிள்யூ எம். ஜியது என்பவர் கொலையுண்டது சம்பந்தமாக டி மார்ட்டின் என்பவர் கைது செய்யப்பட்டிருக்கிருர். விசாரணை நடைபெற்று வருகிறது.

மட்டக்களப்பில் புதிய நீதிபதி

மட்டக்களப்பு, டிச. 15

மட்டக்களப்பு நீதிபதி பி. ஸ்ரீஸ்கந்தராஜா கொழும்புக்கு மாறிச் செல்வதை முன்னிட்டு எம். எம். மஃரூப் என்பவர் அவரது பதவியை இன்று ஏற்றுக்கொண்டார்.

ரூபாய் 3000 பெறுமதியான பொருள் களவு

மட்டக்களப்பு, டிச. 16

ரூபாய் 3000 பெறுமதியான துணிமணிகளும் ஆபரணங்களும் முதலியார் ஆர். ம. டேரோஸ் வீட்டில் இருந்து கள்வர்களால் களவாடப்பட்டது. போலிஸார் இது சம்பந்தமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

குடித்தனப் பெண்களின் குதூகலம்

கட்டுப்பாடுகளும் பங்கீடுகளும் ஒழிந்தன

ரஷியாவின் பொருளாதாரப் புரட்சி

மாஸ்கோ, டிச 16

30 ஆண்டுகளுக்கு முன் அரசியல் புரட்சி நடத்திய ரஷியா இப்பொழுது பொருளாதாரப் புரட்சி நடத்தி உலகைத் திடுக்கிடச் செய்திருக்கிறது. மேற்கு ஜனநாயக நாடுகளின் பொருளாதார நிபுணர்களையும் அரசாங்கங்களையும் திணறும்படி செய்திருக்கிறது. பிரிட்டனும் அமெரிக்காவும் தங்கள் ஏற்றுமதி வியாபாரத்தைப் பெருக்க பகிரங்கமாகவும் ரகசியமாகவும் யுக்தி குயுக்திகள் செய்து கொண்டிருக்க ரஷியா தனது 'ரூபிள்' நாணய முறையைத் திருத்தியமைத்து அதன் எதிராளான அமெரிக்காவையும் பிரிட்டனையும் கதிகலங்கும்படி செய்திருக்கிறது.

ரஷியாவில் பொருட்களின் பங்கீடு முறை ஒழிக்கப்பட்டதால் கள்ள மார்க்கெட்டுகள் அறவே ஒழிந்தன. இதர நாடுகள் காகித நோட்டுச் செலவாணிப் பெருக்கத்தால் திண்டாடிக் கொண்டிருக்க ரஷ்ய இச்சிக்கலை வெட்டியெறிந்து பழைய 10 ரூபிள்களுக்கு புதிய ரூபிள் ஒன்றுதான் கொடுக்கப்படுமென்று சட்டமியற்றி விட்டது. ரூபிள்களைச் சேர்த்து வைத்திருந்தவர்களுக்கு இது சரியான தண்டனையாகும்.

மூன்ருவதாக ரஷியா உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைத்து விட்டது. பழைய பங்கீடு விலை 100க்கு 12 சதவிகிதம் குறைக்கப்பட்டிருக்கிறது. ரஷிய அரசாங்கத்தின் கடன்கள் புதிய கடன்கள் மூலம் புதுப்பிக்கப்பட்டு ஒன்ருக்கப்படும். பழைய கடன்களுக்கு புதிய ரூபிள் பரிவர்த்தனைப்படியே மதிப்பிடப்படும்.

எல்லா நாடுகளும் விலைகளைக் குறைக்கவும் நோட்டு நாணய செலாவணிப் பெருக்கத்தைக் குறைக்கவும் எவ்வித நடவடிக்கை எடுப்பது என்று திகைத்துக் கொண்டிருக்கும் போது ரஷியா அதில் வெற்றி பெற்று விட்டது.

உலகத்தை டாலர் மூலம் கட்டியாள அமெரிக்க அரசாங்கம் மார்ஷல் திட்டம் மூலம் கடன் கொடுத்து ஐரோப்பிய நாடுகளை அமெரிக்க குடியேற்ற நாடுகளாக்கும் சதி முயற்சிக்கு ரஷியா பேதிமாத்திரை கொடுத்திருக்கிறது.

ரஷியாவிடம் 85 கோடி முதல் 425 கோடி பவுண்வரை தங்கம் சேமிப்பாக இருக்கிறதென்று சொல்லப்படுகிறது. ரூபிள் தங்க அஸ்திவாரத்தின் மீது நிலைத்திருக்கும். தங்கத்தை ரூபிளுடன் ரஷியா பிணைக்க விடுமானுல், ஸ்காண்டிநேவியா, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ரஷியாவுடன் வியாபார ஒப்பந்தம் செய்து கொண்டிருந்த இதர நாடுகள் எல்லாம் "ரூபிள் தொகுதியில்" வந்து அடங்கிவிட நேரிடும். ஏற்கெனவே உலக வியாபாரத்தில், டாலர் தொகுதியும் ஸ்டெர்லிங் தொகுதியும் பெருங் குழப்பங்களை உண்டு பண்ணி வருகின்றன. இவை இரண்டுக்கும் போட்டியாக இப்பொழுது "ரூபிள் தொகுதி" முன்வந்திருக்கிறது. அரசியலையும் தங்கத்தையும் தங்கள் பிரதம ஆயுதங்களாக வைத்துக் கொண்டு உலகச் செல்வத்தைச் சுரண்டிவரும் அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய வல்லரசுகளின் வியாபார ஆட்சிக்கு ரஷிய ரூபிள் புரட்சி ஒரு பெரிய எதிரியாகத் தோன்றியுள்ளது.

கோலாகலம்

மாஸ்கோ, டிச. 16

பங்கீடுமுறை ஒழியவே மாஸ்கோவில உணவுப் பொருட்களும் மற்றக் கைத்தொழில் பொருட்களும் குறைந்தவிலைக்கு ஏராளமாகக் குவிகின்றன.

குடித்தனம் நடத்தும் பெண்கள் பங்கீடு முறையொழிந்ததைக் கண்டு பேரானந்தம் கொண்டு கோலாகலமாகக் கடை வீதிகளுக்குச் சென்று ஏராளமான சாமான்களை தட்டுப்பாடின்றி சரசமான விலைக்கு வாங்கி வருகிருர்கள்.

பல்கேரியா-அல்பேனியா ஒப்பந்தம்

சோபியா, டிச 16

பல்கேரியாவும் அல்பேனியாவும் பரஸ்பர நேச கலாசார உதவி ஒப்பந்தமும் பொருளாதார உடன்படிக்கைகளும் செய்து கொண்டன.

ஜினிவா வரி ஒப்பந்தங்கள்

வாஷிங்டன், டிச. 16

சென்ற அக்டோபரில் கைச்சாத்திடப்பட்ட ஜினிவா வர்த்தக வரி ஒப்பந்தங்களில் கண்டுள்ள வரி விகிதங்களை ஜனவரி முதல் தேதி முதல் அமுல் செய்யும்படி ட்ரூமன் உத்தரவு பிறப்பித்திருக்கிருர்.

கானடா இறக்குமதி

ஒட்டாவா. டிச. 16

இறக்குமதிக் கட்டுப்பாடு மசோதாவை இன்று கானடா பிரதம மந்திரி பாராளுமன்றத்தில் கொண்டு வந்து பின்வருமாறு கூறினுர்:- கானடா, பிரிட்டன், பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகள் மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஆகியவைகளிடமிருந்து இறக்குமதியை அதிகரிக்கலாம். நமது முக்கிய நோக்கம் அந்நாடுகளில் ஏற்பட்டுள்ள அமெரிக்க டாலர் பஞ்சத்தை போக்குவதாகும்.

கலால் வழக்கில் எதிரி விடுதலை

விரோதிகள் செய்த சூழ்ச்சியா?

மட்டக்களப்பு, டிச. 16

இப்ராஹிம்சாய்பு மீரா மொஹிதீன் என்ற காத்தான்குடி வாசியின் வீட்டு வராந்தாவில் கஞ்சா, அபின் இருக்க போலிசாரால் கண்டு பிடிக்கப்பட்டது. வீட்டுக்காரரின் தம் எதிரிகளே இதனை அங்கே வைத்திருக்க வேண்டும் என்று கூறப்பட்டது. விசாரணை முடிவில அவர் விடுதலை செய்யப்பட்டார்.

கத்தியால் குத்திக் கொலை

ஒருவர் கைது செய்யப்பட்டு இருக்கிருர்

கொழும்பு, டிச. 17

பலாங்கொடைப் போலிஸ் பகுதியிலுள்ள ராஜவாக்கெபியில ரத்துஹாமி என்பவர் கத்தியால் குத்திக் கொலைசெய்யப்பட்டுவிட்டார். எம். எம். கிரிவாந்தி என்பவர் இது சம்பந்தமாகக் கைதுசெய்யப்பட்டிருக்கிருர்

பாகிஸ்தானின இரு கப்பல்கள்

கொழும்பு துறைமுகத்துக்கு வந்தன

கொழும்பு, டிச. 17

பாகிஸ்தான் கடற்படையைச் சேர்ந்த கோதாவரி, தனுஷ் என்னும் இரு கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில் தற்போது நங்கூரமிட்டுள்ளன. இரண்டும் தனித்தனி 2.00 டன் நிறையுள்ளவை என்று தெரிகிறது.

வரப்பெற்ருேம்

விவேகானந்தா திருக்குறட் கலண்டர் 1948

யாழ்ப்பாணம் விவேகானந்தா புத்தகசாலையினரால் தமது விவேகானந்தா அச்சகத்தில் அழகாக அச்சிடுவிக்கப்பெற்று வருடந்தோறும் வெளியிடப்படும் "விவேகானந்தா திருக்குறட் கலண்டர், 1948-ம் ஆண்டுக்குரிய பிரதி கிடைக்கப்பெற்ருேம்.

இக்கலண்டர் எம்மதத்தவரும் சம்மதமாகத் தத்தம் இல்லங்களில் தொங்கவிடலாம்.

எமக்கு அனுப்பிய பிரதியில் விலை குறிப்பிடப்படவில்லை

அங்காடி வியாபாரிகள் தொல்லை

கடைக்காரர் மகஜர் தயாரிக்கின்றனர்.

கொழும்பு, டிச. 17

புறக்கோட்டைப் பகுதியில், வீதியில் வியாபாரம் செய்யும் அங்காடிக்காரர்கள் தொல்லை மிக அதிகமாகி விட்டதாகக் கூறப்படுகிறது. இவர்கள் அளவுக்கு மீறிப் பெருகியிருப்பதோடு வீதி ஓரம் பூராவையும் தங்கள் கடைகளைப் பரப்பி அடைத்து விடுகிருர்கள் எனவும் அதனுல் சாதாரண கடை வியாபாரிகளின் வர்த்தகம் தடைபடுகிறதென்றும் புகார் செய்து அவர்களால் ஓர் மகஜர் தயாரிக்கப்பட்டு வருகிறது. இம்மகஜர் மேயருக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் இதில் மெயின் ஸ்ட்ரீட் போன்ற முக்கிய தெருக்களில் ஒரு குறித்த அளவுக்குமேல் இவ் அங்காடி வியாபாரிகளை அனுமதிக்கக் கூடாதென்று கோரப்படுமென்றும் தெரிகிறது.

27,283 வேலையில்லாதாருக்கு வேலைகிடைத்தது

கொழும்பு, டிச. 16

அரசாங்க உத்தியோக வட்டாரங்களின்படி இதுவரை 32,3336 பேர் வேலையில்லாதார் ஜாபிதாவில் பதிவுசெய்யப்பட்டனர்என்று தெரிகிறது. இவர்களில் 27,283 பேருக்கு வேலைகள் இதுவரை கொடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கொழும்பு, டிச. 16

பேராசிரியர் ஜே. எச். ஜி. லெபொன் தலைமையில் சர்வகலாசாலை பூமி சாஸ்திரப் பகுதி மாணவர்கள நுவரேலியாப் பகுதியில் ஒரு வாரம் தங்கி பூமியின் தன்மையைப்பற்றி ஆராய்ச்சிகள் நடத்தினர் என்று தெரிகிறது.

மணிலா மகாநாட்டு இலங்கைப் பிரதிநிதி

இவ்வாரம் திரும்பலாம்

கொழும்பு, டிச. 17

மணிலாவில் தூரகிழக்கு பொருளாதார கமிஷனுக்கு இலங்கைப் பிரதிநிதியாகச் சென்ற எச். டபிள்யூ. அமரசூரியா இவ்வாரம் இலங்கை வருவார் என எண்ணப்படுகிறது. அவருக்கு ஆலோசகராகச் சென்ற டாக்டர் டி. பி, தாஸ் குப்தா ஏற்கனவே இலங்கை திரும்பி விட்டார்.

அலகாபாத் சர்வகலா சாலைக்கு ரூ. 22 லட்சம்

அலகாபாத், டிச. 16

அலகாபாத் சர்வகலாசாலை வைரவிழாவை முன்னிட்டு சர்வகலாசாலைக்கு 22 லட்ச ரூபாய் திரட்டப்பட்டுள்ளது. இந்திய அரசாங்கம் 10 லட்ச ரூபாய் அளித்திருக்கிறது.

ஆசியா பொருளாதார மகாநாடு

உதகமண்டலம், டிச 16

ஆசியா பொருளாதார கமிஷனின் அடுத்த மகாநாடு 1948 மே அல்லது ஜூன் மாதத்தில் உதகமண்டலத்தில் நடைபெறும்.

ஏஜெண்டுகள் தேவை

'சுதந்திரன்' பத்திரிகை விற்பனை செய்ய, கொட்டகல, கினிகத்தன, நானுஓயா பகுதிகளுக்கு ஏஜெண்டுகள் தேவை. தயவு செய்து நிபந்தனைகளுக்கு விண்ணப்பிக்கவும்.

மானேஜர்.
'சுதந்திரன்'
194. A டாம் தெரு,
கொழும்பு 12

உங்கள்நோய்எதுவானுலும்சரி
உத்தரவாதமாக தீர்த்துதருகிறேன்.

வாழ்க்கையைப் பாழ்படுத்தும் கொடூரமான தொற்று வியாதி உள்ளவர்கள் தங்களுக்குப் பின்னுல் நோயும் கஷ்டமும் அனுபவிக்கும் சந்தானத்தைத் தவிர வேருென்றையும் நிலைக்கச் செய்வதில்லை. எனவே உங்களைப் பீடித்திருக்கும் கொடிய பிணிகளை அகற்றி சுகத்துடன் வாழ என்னுடன் கலந்து ஆலோசியுங்கள்.

அஸ்மா, காசம், க்ஷயம், மூலம், வாதம், குஷ்டம் என்றும் தீராத நோய் எதுவானுலும்சரி உத்தரவாதமாய் தீர்த்துதருகிறேன். நோய்எதுவானுலும் பொருத்தம் பேசியும் தீர்த்து கொடுக்கப்படும் நான் எனது கிளை வைத்தியசாலை நம்பர் 23/7 ஸ்டான்லி ரோட் (வெல்லிங்டன் படமாளிகைக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். இம்மாதம் 25-ம் திகதிவரை தங்கி இருப்பேன்.

Ayur Dr. V. K. S, செல்லப்பாபிள்ளை M. A. M. S.
(கல்கத்தா)

சிவானந்த சித்தர் வைத்தியசாலை,
ஹெட் ஆபீஸ்: 92 செட்டியார் தெரு, கொழும்பு.
பிராஞ்சு ஆபீஸ்கள்:
768 லோவர் வீதி, பதுளை.
23/7 ஸ்டான்லி ரோட், யாழ்ப்பாணம்.

உங்கள் தேவைக்கான

- சிமந்து
- சிகப்புச் சிமந்து
- மஞ்சள் காவித்தூள்
- சிகப்புக் காவித்தூள்
- தீந்தை வகைகள்
- எண்ணெய் வகைகள்
- வார்ணிஷ்
- ஹரிக்கன் லாம்பு
- இரும்பு வலைகள் No. 3, 6, 8, 9.
- மெஷின் துடைக்கும் நூல்
- கம்பி ஆணிவகைகள்
- பருளை ஆணிசைஸ்கள்
- இரும்பு ஸ்குரு ஆணி
- பித்தளை ஸ்குரு ஆணி
- அரத்தாள்கள்
- அரவகைகள்
- டிஸ்டெம்பர் நிறங்கள்
- வார்ணிஷ் பிரஷ்கள்
- பிடிச்சராவி சைஸ்கள்
- சவுல்கள்
- பித்தளைக் குழாய்கள்
- நெருப்புத் தண்ணீர்
- பூட்டு வகைகள்

இன்னும் வேண்டிய பொருட்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.
சகாயமான விலைகளில் கிடைக்கும்!

ஓரியன் மெர்க்கன்டைல் ஏஜென்ஸி
346, 348, பழைய சோனகத் தெரு,
கொழும்பு.
Telegram: "ORICON" Telephone: No. 2445

'கண்டி அரசர் சந்ததியாருக்கு இலங்கையில் வேலை கொடுங்கள்'

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

தொழிற்சங்க விவகாரங்களை பொறுத்த அளவில் பிரதமர் பாஸிஸ கொள்கைப் போக்கில் செல்வதாகவும் பிரிட்டனிலிருந்து வந்த நிபுணர் ஒருவருக்கு அவருடைய வேலைகளைச் செய்ய தகுந்த இடமளிக்கப்படாததால் அவர் திரும்பி விட்டார் என்றும் திரு. பிலிப் குணவர்த்தன கூறினர். இவ்விஷயத்தை சபையில் நன்கு அலசிப்பார்க்கக் கூடியதாக கொண்டுவர வேண்டுமென சபாநாயகர் தெரிவித்தார்.

திரு. டி. பி. ஆர் குணவர்த்தன பேசுகையில் பாராளுமன்ற திறப்பு விழா தினத்தன்றே இது சம்பந்தமான தீர்மானம் கொண்டு வர இருந்ததாக தெரிவித்தார்.

தற்காலிக குமாஸ்தாக்கள் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டதற்காக நிரந்தர சேவைக்குள் எடுக்கப்படவில்லையென்று டாக்டர் பெரேரா கூறினர் இதுபற்றி தகுதி வாய்ந்த அதிகாரிகள் ஆலோசித்து தற்காலிக குமாஸ்தாக்களை வேலைக்கு நிரந்தரமாக எடுப்பார்களென்று பிரதமர் கூறினர். இம்மான்யப் பகுதி நிறைவேற்றப்பட்டது.

சிவில் உத்தியோக செலவு (பகுதி 33) மான்யம் ரூ.363,143 நிறைவேறியது.

சுருக்கெழுத்தாளர் (பகுதி 34) ரூ. 15,292 மான்யம் நிறைவேறியது.

கணக்குப் பகுதி அதிகாரிகள் சம்பந்தமான (பகுதி 35) மான்யம் ரூ. 45,863 நிறைவேறியது.

நானாவித சேவை செலவு (பகுதி 36) மான்யம் ரூ. 6,48,763 சம்பந்தமாக டாக்டர் என். எம். பெரேரா கொண்டு வந்த திருத்தப் பிரேரணைகள் தோல்வியுற்றன.

திரு ஈ. எப். என். கிரேஷியன் பேசுகையில் சொத்துக்கள் மதிப்பிடுவது சம்பந்தமாக அதிருப்தியைக் கொடுப்பதாக கூறினர். காணிகள் சொந்தக்கள் முதலியனவுக்கு நஷ்டஈடு கொடுப்பதில் தாமதம் ஏற்படுவதால் ஏழைகள் கஷ்டப்படுவதாக திரு. தஹநாயக்கா கூறினர். மக்களுக்கு நஷ்டஈடு கொடுப்பது சம்பந்தமான சட்டம் திருத்தப்பட வேண்டுமென திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூறினர். இந்த மான்யம் நிறைவேறியது.

நிதிமந்திரி (பகுதி 37) மான்யம் ரூ 229,392 சம்பந்தமாக விவாதிக்கப்பட்டது. இத்துடன் நேரம் 3-30 மணியானதால் தேனீர் இடைவேளைக்கு சபை ஒத்திவைக்கப்பட்டது.

தேனீர் இடைவேளைக்குப் பின் சபை 4-15 மணிக்குக் கூடியது. நிதிமந்திரி இலாகா மான்யம்பற்றி தொடர்ந்து விவாதம் ஆரம்பித்தது. திரு கிரேஷியன் பேசுகையில் நிதிமந்திரியின் நிரந்தரக் காரியதரிசியைப் பாராட்டினர்.

நீதிமன்ற நடவடிக்கைகள் சுதேச பாஷைகளில் நடத்தப்படவேண்டுமென்றும் நீதிஇலாகாவின் முழுக்கொள்கையும் திருத்தப்பட வேண்டுமென்றும் திரு தஹநாயகா கூறினர்.

திரு சாம்சில்வா சபாநாயகரிடம் ஒரு சம்மன்சைக் கொடுத்து அதில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளதாகவும் எதிரிமீதுள்ள குற்றச்சாட்டு குறைக்கப்படவில்லையென்றும் நீதிமன்றத்துக்கு வரும்படி மாத்திரம் குறிக்கப்பட்டுள்ளதென்றும் கூறினர். இதுபற்றி திரு கிரேஷியன் குறிப்பிடுகையில் ஒழுங்கீனமான செயல் என்று கூறினர்.

சபாநாயகர் பேசுகையில் இத்தகைய ஒழுங்கீனங்கள் தமக்கும் தெரியுமென்றும் இதுபோன்றவை மேலும் நடவாது தாம் பார்த்துக்கொள்வதாகவும் கூறினர். நிரந்தரக் காரியதரிசியின் சம்பளத்தில் ரூ. 3000 குறைக்கப்பட வேண்டுமென திரு வன்னியசிங்கம் கொண்டு வந்த தீர்மானம் வாபஸ் பெறப்பட்டது. டாக்டர் என். எம். பெரேரா கொண்டுவந்த பல திருத்தப் பிரேரணைகளும் வாபஸ்பெறப்பட்டன.

திரு ரெஜி பெரேரா பேசுகையில், அரசாங்க சபையில் திரு பிலிப் குணவர்த்தன கொண்டுவந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானப்படி நீதிமன்றங்களில் சுதேச பாஷைகளில் நடத்தப்படவில்லையென்று கேட்டார். மாஜிஸ்டிரேட்டுகளை மாற்றுவதில் அனுஷ்டிக்கப்படும் முறைகள் திருத்தப்பட வேண்டுமென்று திரு ஸ்ரீநிஸங்கா கூறினர்.

திரு டி. பி. சுப்பசிங்கா பேசுகையில் நீதிமன்றங்களில் சுதேச பாஷைகளில் நடவடிக்கைகளை எடுக்க உடன் ஏற்பாடுகள் செய்யப்படவேண்டுமென்று கூறினர்.

சட்ட ஆலோசனைகள் கோரும் ஏழைகளுக்கு இலவசமாக சட்ட ஆலோசனைகளை கூறுவதற்கு ஏற்பாடுகளை நீதிமந்திரி இலாகா எடுக்கவேண்டுமென்று திரு கெனமன் குறிப்பிட்டார். ஏழைகளுக்கு சட்ட ஆலோசனைகள் முதலியன இலவசமாக அளிக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென திரு கிரேஷியன் கூறினர். ஏழைகள் சட்ட ஆலோசனைகளைப் பெற முடியாது கஷ்டப்படுவதுபற்றி இவர் எடுத்துக்கூறினர். ஒரு சந்தர்ப்பத்தில் ஒருவர் சட்ட உதவிகளைப் பெற முடியாது தூக்குமேடைக்குப் போகவேண்டி வந்ததென்றும் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகள் முதலியனவற்றில் திருத்தங்கள் செய்யப்படவேண்டுமென்றும் அடுத்த பட்ஜெட்டில் அதற்குஇடம் வகுக்க வேண்டுமென்றும் அவர் மேலும் கூறினர்.

திரு ஐ. கே. எம். இரியகொலா பேசுகையில் நீதிமன்றங்களில் லஞ்சமும் ஊழல்களும் அதிகமென்றும் ஏழைகள் இதனால் மிகவும் கஷ்டப்படுகின்றனர் என்றும் கூறினர்.

நீதி மந்திரியின் பாராளுமன்றக்காரியதரிசி திரு ஜி. ஆர். டி சில்வா பேசுகையில் தமக்கு முன் பேசியவர்கள் குறிப்பிட்ட விஷயங்கள்பற்றி அதிக கவனமெடுக்கப்படுமென்று தெரிவித்தார்.

தொழிலாளர்களை அவர்கள் குடியிருக்கும் இடங்களிலிருந்து வெளியேற்றும் அதிகாரம் மாஜிஸ்டிரேட்டுகளுக்கு அளிக்கப்படாதென்றும் சட்டத்தில் திருத்தம் செய்யப்படவேண்டுமென்றும் திரு ஜே ஆர். மோத்தா கூறினர். இவைபற்றி கவனிப்பதாக திரு ஜி ஆர். டி. சில்வா தெரிவித்தார்.

விவசாயிகள் நெல் வரி செலுத்தாததற்கு சிறைக்கு அனுப்பப்பட்டுள்ளனரென்றும் இது நிறுத்தப்பட வேண்டுமென்றும் வரி செலுத்தாததற்கு அவர்களை தண்டிக்கப்படாதென்றும் திரு ராபர்ட் குணவர்த்தன கூறினர். இந்த மான்ய தொகை நிறைவேறியது.

அட்டார்ணி ஜெனரல் இலாகா செலவு (பகுதி 38) மான்யம் ரூ 566 514 சம்பந்தமாக திரு தஹநாயகா ரூ. 10 குறைக்க வேண்டுமென்று கொண்டுவந்த திருத்தப் பிரேரணை வாபஸ் பெறப்பட்டது. டாக்டர் பெரேரா, திரு தஹநாயகா முதலியோர் கொண்டுவந்த திருத்தப்பிரேரணைகளும் வாபஸ் பெறப்பட்டன.

இலங்கை டொமினியன் அந்தஸ்து பெறுவதுடன் புதிய பல இலாகாக்களும் தோன்றுமென்றும் வர்த்தக இலாகா தனிப்பட்ட சட்ட அறிஞர்களை வைத்திருக்க வேண்டுமென்றும் திரு கிரேஷியன் கூறினர். இந்த மான்யம் நிறைவேறியது.

சட்ட நிர்மாண இலாகா (பகுதி 39) மான்யம் ரூ 259,185 நிறைவேறியது.

பொது தர்மகர்த்தா (பகுதி 40) இலாகா மான்யம் ரூ. 138,218 சம்பந்தமாக விவாதிக்கப்பட்டது. திரு. கே. கனகரத்தினம் பேசுகையில் இந்த இலாகா நஷ்டத்தில் நடப்பதாகவும் செலவைக் குறைத்து இந்த இலாகா புரியும் சேவைகளுக்கு வாங்கப்படும் பணம் தொகைபற்றி திருத்தியமைக்கப்பட வேண்டுமென்றும் ஓடிட்டர் ஜெனரலின் கடந்த அறிக்கைப்படி இந்த இலாகாவின் செலவு சுமார் ரூ 51,000 என்றும் சுமார் ரூ. 65,000 துண்டு விழுந்துள்ளதென்றும் கூறினர். திரு எச். ஸ்ரீநிஸங்காவும் இதனைக் குறிப்பிட்டார். இந்த மான்யம் நிறைவேறியது.

நிதி இலாகா (பகுதி 41) சம்பந்தமான மான்யம் ரூ. 71,12[illegible] நிறைவேறியது.

டிஸ்டிரிக்ட் நீதி மன்றங்கள் (பகுதி 42) மான்யம் ரூ 1,582,669 சம்பந்தமாக திரு வி. குமாரசாமி பேசுகையில், சாவகச்சேரி தொகுதியில் உள்ள டிஸ்டிரிக்ட் கோர்ட்டுகள் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகள் முதலியனவற்றில் எதிரிகள் நடத்தப்படும் முறைகள் ஒழுங்கீனமாக இருப்பதாகவும் அதிகாரிகள் இதனைக் கவனிக்க வேண்டுமென்றும் கூறினர். இந்த மான்யம் நிறைவேறியது.

சின்னக் கோர்ட்டுகள், மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகள் மான்யம் ரூ 1,349 575 சம்பந்தமாக திரு குமாரசாமி பேசுகையில், தோல்வியுற்ற அபேட்சகர்களை நீதி இலாகா சேவைக்கு நியமிக்கப்படுவது மிகவும் பிழையான செயலென்று கூறினர். இதுவும் நிறைவேறியது.

கிராமக் கோர்ட்டுகளுக்கு ஒதுக்கப்பட்ட (பகுதி 44) மான்யம் 849 289 சம்பந்தமாக திரு குமாரசாமி பேசுகையில் பூநகரி முதலான இடங்களில் உள்ள கிராமக் கோர்ட்டுகள் முறைப்படி நடத்தப்படவில்லையென்றும், ஏழைகள் கஷ்டப்படுகின்றனர் என்றும் கிராமக் கோர்ட்டுகளின் தலைவரின் பிழைதான் காரணமென்றும் போக்குவரத்து கஷ்டமென்றும் இதனால் மாஜிஸ்டிரேட்டுகளுக்கு அதிக கஷ்டமென்றும் கூறினர்.

திரு தஹநாயகாவும் கிராமக் கோர்ட்டுகள் பற்றி குறிப்பிட்டார். திரு சிவபாலனும் இக்கோர்ட்டுகள் பற்றிய குறைகளை எடுத்துக் கூறினர். இந்த மான்யம் நிறைவேறியது.

பிஸ்கால் (பகுதி 45) இலாகா மான்யம் ரூ 2,07,237 சம்பந்தமாக திரு குமாரசாமி பேசுகையில் இந்த இலாகாவில் உள்ள குறைகள் பற்றி குறிப்பிட்டு அவை திருத்தப்பட வேண்டுமென்று கூறினர்.

திரு ராபர்ட் குணவர்த்தன பேசுகையில் ரிமாண்டில் உள்ள கைதிகள் மிக மோசமாக நடத்தப் படுவதாகவும் இவை சீர்திருத்தப்பட வேண்டுமென்றும் கூறினர். இந்த மான்யம் நிறைவேறியது.

நஷ்ட ஈட்டுக் கோரிக்கை (பகுதி 46) மான்யம் ரூ 79,128 சம்பந்தமாக திரு எஸ ஜே. வி செல்வநாயகம் பேசுகையில் பொதுமக்களுக்கு வழங்க வேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகைகள் கொடுக்கப்படாததினால் அவர்கள் கஷ்டப்படுகின்றனரென்றும் இந்த நிலை விரைவில் சீர்திருத்தப்பட வேண்டுமென்றும் கூறினர். இந்த மான்யம் நிறைவேறியது

உள்நாட்டு மந்திரி இலாகா மான்யம் சம்பந்தமான திருத்தப்பிரேரணைகள் தயாராக இல்லாததினால் சபை நடவடிக்கைகளை இன்று பிற்பகல் ஒரு மணி வரை ஒத்திவைக்க ஆலோசிக்கப்பட்டது.

சபை நடவடிக்கை ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

திரு எஸ். டப்ளியூ ஆர். டி. பண்டாரநாயகா பேசுகையில் மலேயாவுக்கு அனுப்பப்பட்ட இலங்கை இராணுவத்தினரிடையே அதிருப்தி நிலவுவது பிரதமருக்குத் தெரியுமாவென்றும், இதனால் அவர்களை பிரதமர் உடனே திரும்பவும் இலங்கைக்கு அழைக்கவேண்டுமென்றும் கூறினர்

மலேயாவிலுள்ள இலங்கை இராணுவத்தினரிடையே எதுவித மன அதிருப்தியும் இருப்பதாக தமக்குத் தெரியாதென்றும் இப்படையில் இலங்கையர் தங்கள் விருப்பப்படி சேர்ந்தவர்களேயென்றும் தாம் இதில் தலையிட விரும்பவில்லையென்றும் பிரதமர் பதிலளிக்கையில் கூறினர்.

சபை இன்று ஒருமணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

விசாக பட்டணத்திலும் கடற்படைக் கல்லூரி

புதுடில்லி, டிச 16

இந்தியாவின் கடற் படையைப் பெருக்கும் திட்டம் துரிதமாக அமுல் செய்யப்பட்டு வருகிறது. ஏற்கனவே கொச்சியில கடற் படைப் பயிற்சி அளிப்பதற்கு கல்லூரிகள் நிறுவ வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. கொச்சியை பெரிய கடற் படைத் தளமாக்கவும் வேலை ஆரம்பமாகிவிட்டது. அடுத்தாற்போலும் விசாகபட்டணம் துறைமுகத்தில் கடற் படை பயிற்சி கல்லூரி அமைக்க ஏற்பாடு நடைபெறுகிறது. அடுத்த வருடக் கடைசிக்குள் இந்தியா வாங்கும் 4 பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் இந்தியா வந்து சேர்ந்துவிடும்.

தட்டாதெரு மெ. மி. பாடசாலையில் பெற்றோர் தின விழா

பருத்தித்துறை. டிச 15

பருத்தித்துறையிலுள்ள தட்டாதெரு மெ. மி. பாடசாலைப் பெற்றோர் தின விழா சென்ற வெள்ளிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் நியாயதுரந்தரர் திரு கே. சங்கரப்பிள்ளை அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. அத்தருணம பெற்றோரும மற்றும் அன்பரும் ஏராளமாகச் சமுகமாயிருந்தனர் திரு பி. வேலுப்பிள்ளை அவர்களால் தமிழ்நாட்டுப் பழக்க ஒழுக்கங்கள் என்னும விஷயமும்; திரு எஸ் கே. இராசசூரியர் அவர்களால் தொற்றுநோய் பரவா வழிகள் என்னும் விஷயமும்; நியாயதுரந்தரர் திரு கே. ஜெயக்கொடி அவர்களால் தாய்ப்பாஷைக் கல்வி என்னும் விஷயமும்; பிறக்டர் திரு வி. தர்மகுலசிங்கம் அவர்களால் தமிழரின் எதிர்கால நிலை என்னும் விஷயமும்; திரு ஏ. வி ஆறுமுகம் அவர்களால் பெற்றோரும ஆசிரியரும் என்னும் விஷயமும் பேசப்பட்டன. மாணவர்களின் அப்பியாசங்கள் மிகத் திறமையாய்க் காணப்பட்டன இப்பகுதி வித்தியாதரிசினி ஸ்ரீமதி கூ. [illegible] அவர்களால் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு ஜே எஸ் ஞானமுத்து அவர்களால் பாடசாலை அறிக்கை வாசிக்கப்பட்டது.

திரிகோணமலையில் ஆசிரியர்களுக்கு பிரிவுபசாரம்

பெரியகிண்ணியா, டிச. 12

திரிகோணமலையைச் சேர்ந்த பெரியகிண்ணியா அரசினர் ஆண்பாடசாலையிலிருந்து வறக்காப்பொலை அரசினர் பாடசாலைக்குத் தலைமை ஆசிரியராக மாறிச் செல்லும் ஜனாப் ஏ. எச். முகமது ஆசிரியர் அவர்கட்கும், நிந்தவூர் வடக்கு அரசினர் ஆண்பாடசாலைக்கு உதவி ஆசிரியராக மாறிச்செல்லும் ஜனாப் ஏ. எம். அகமது ஆசிரியர் அவர்கட்கும் சென்ற 10-12-47 ல் மேற்படி பாடசாலையில் வைத்து கிராமவாசிகளால் ஒரு சிறப்பான பிரிவுபசாரம் நடத்தப்பட்டது. கூட்டத்துக்கு கிராமச் சங்கத் தலைவர் ஜனாப் எம். எஸ. ஏ எச். முகமது அப்துல்லா அவர்கள் தலைமை வகித்தார்கள். அரபு ஆசிரியர் ஜனாப் பி. பி அகமது சாஹிப், தலைமை ஆசிரியர் திரு எம். ரி. காசிநாதர் ஆகியோர் ஆசிரியர்களின் சேவைகளைப் பாராட்டிப் பேசினர்கள்.

தமிழ்நாட்டு இசைவாணியின் சங்கீதக் கச்சேரி

பம்பாயில் ஒரு லட்ச ரூபாய் வசூல்

பம்பாய், டிச. 15

புகழ்பெற்ற தமிழ் நாட்டு இசைவாணி எம். எஸ. சுப்பலட்சுமியின சங்கீதக் கச்சேரி நேற்று இங்கு நடைபெற்றது 4 மணி நேரம் கர்னாடக சங்கீதக் கச்சேரி நடைபெற்றது. ஒருலட்ச ரூபாய் வசூலாயிற்று. தென்னிந்திய கல்விச் சங்கத்தின் கல்லூரிக் கட்டிட நிதிக்காக இக்கச்சேரி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது

பம்பாய் உள்நாட்டு மந்திரி மோசார்ஜி தேசாய் தலைமை வகித்தார். தர்ம கைங்கரியங்களுக்காகத் தனது சங்கீதகலையை உதவ முன்வந்த தமிழ்நாட்டு இசைவாணியின் சங்கீதத் திறமையை அவர் பாராட்டிப் பேசினர் பரோடா மகாராஜா மகாராணி மற்றும் பம்பாய் நகரின் பிரமுகர்களும் வந்திருந்தார்கள். இக்கச்சேரி வைபவத்திற்கு மேற்கு வங்க கவர்னர் ராஜாஜி, ஐக்கிய மாகாண கவர்னர் ஸ்ரீமதி சரோஜினி தேவி, பம்பாய் பிரதம மந்திரி பி. ஜி. கெர் முதலியோர் பாராட்டுச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

லண்டன், டிச. 15

ஐ நா. வைச் சேர்ந்த 56 தேசங்களின் ஒவ்வொரு பிரஜையும் 1948 லீப் வருஷம் பிப் 29-ம தேதி தனது ஒரு நாள் வருமானத்தை பட்டினி கிடக்கும் உலக மக்களின் நிவாரணத்துக்காகக் கொடுக்குமாறு கேட்கப்படுவார்- "ஒரே சுதந்திர உலகத்துக்காக ஒரு நாள் சயபளம."

கிங்ஸ்லியில் தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன், எம். எஸ். சரோஜினி, எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம் ஆகியோர் திறம்பட நடிக்கும்

கன்னிகா

மகத்தான 5-வது வாரம்

பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர் நடனங்கள், செவிக்கினிய கீதங்கள் கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங்கவரும் உயரிய நடிப்புடன் நிறைந்தது.

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோடு, மருதானை.

தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும், சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

சித்ரகலாவின் உன்னத தயாரிப்பு

முதல் நம்பர் நடிகர்கள் எடிஜெயமான, ருக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்

'இழந்த உறுதி'

என்னும் வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப் படம்

புதிய இயந்திர அமைப்புகளுடன் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

பீடிச் சக்கரவர்த்தி.

த. பி. சொக்கலால் ராம்சேட் பீடி

2 பீடிரிங்லேபில்

சொக்கலால் ராம் சேட்
ටී.පී. චොක්කලාල් රාම්සේට් බීඩි

அற்புதமானது! ஆனந்தமளிப்பது!!

மனதிற்கு பரவசமும் உல்லாசமும் ஊட்டுவது

இப்படியாக பாலர் முதல் பெரியோர்வரை ஏகோபித்து புகழ்வதெல்லாம்

மேனகா மார்க் லோசிஞ்சர்களே!

மேனகா மார்க் லசிஞ்சர்கள் ஒவ்வொன்றிலும் தேகத்திற்கு வலிமை அளிக்க வல்லதும், இரத்த விருத்தியுண்டாக்குவதுமான குளுக்கோஸ் எனும் சத்து சேர்ந்திருக்கிறது. அத்துடன் மனதிற்கு நல்மணமும், நற்சுவையும் கொடுக்கக்கூடிய பழரசச் சத்தும் சேர்ந்து இதற்கென்றே இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட நிபுணர்களைக்கொண்டு சாஸ்திரமுறைப்படி தயாரித்து யாவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய விதத்தில் சரசமான விலையில் டின்களில் அடைத்து விற்கப் படுகின்றது.

மேனகா மார்க் லோசிஞ்சர்

எல்லா முக்கியவியாபாரிகளிடமும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-

ராஜா இன்டஸ்ரியல் வேர்க்ஸ்,

71, புதிய சோனகத் தெரு, கொழும்பு.

Telegram: "SWEETS" Telephone: 2737

கீழ்க்காணும் வியாபாரிகளை நமது முக்கிய விநியோகஸ்தர்களாக நியமித்திருக்கிறோம்.

V. T. செல்லையா அன் கோ, குருநாகல்
K. முருகேசு அன் கோ, " "
மனோன்மணி ஸ்டோர், கேகாலை Kegalle.
W. E. M. பாஷா சாகிப் அன் கோ, நாவலப்பிட்டி
N. B. அந்திரிஸ சில்வா அன் கோ, கம்பளை
M. சேகு அலி ராவுத்தர் அன் கோ, வத்துகாமம்
A. S. M. முகைதீன் அன் கோ, மாத்தளை
M. T. செல்லையா அன் கோ, கெக்கிராவ
K. சிவகுருநாதப்பிள்ளை அன் சன்ஸ், யட்டியாந்தோட்டை
S. நாகமுத்து, ருவான்வெலை.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம வருஷம டிசம்பர் மாதம் 18-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கந்தோரில் அச்சிட்டு கொழும்பு மெயின்ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.